# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD
FOR THE PEOPLE"
Isaiah 62:10**

**Translated from
BS#944
Sep-Oct 2024**

**பொருளடக்கம்**

✡ மனிதன் தன் உடன் மனிதரிடம் கொண்டிருக்கிற மனிதாபிமானமற்ற தன்மை ........ 2

✡ யாக்கோபின் இக்கட்டுக் காலம் ........ 9

✡ அறிவிப்பு ........ 20

**BS Tamil Version - 86** **2024**

# மனிதன் தன் உடன் மனிதரிடம் கொண்டிருக்கிற மனிதாபிமானமற்ற தன்மை

Man's Inhumanity to His Fellow Man

**தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1 யோவா. 4:16).**

தேவனுடைய விசேஷித்த அன்பையும், உலகத்தாரிடமிருந்து வேறுபட்டவர்களாக, பிரதிஷ்டை செய்த தம்முடைய பிள்ளைகளுக்கான பராமரிப்புகளையும் பற்றி இந்த வேத வாக்கியம் கற்பிக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார் என்கிற வேதவாக்கியமும், அதோடு கூட அவர் ஞானமுள்ளவராகவும், நீதியுள்ளவராகவும், சர்வவல்லவராகவும் இருக்கிறார் என்ற அதன் போதனையும் பொதுவாக கிறிஸ்தவ ஜனங்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. தேவனுடைய பார்வையில் பிரியமாயிருக்கிற காரியங்களைச் செய்ய விரும்புவதோடு மட்டுமல்லாமல், வாஞ்சையோடும் செய்கிற அந்த அளவுக்கு, இந்த வேத வாக்கியத்தின் கருத்தின் அடிப்படையில் எந்த மனுஷனும் முதலில் தன்னுடைய தேவனை நேசிக்கிற வரையிலும், தன் அயலானை நேசிக்க முடியாது.




அதற்கு கைமாறாக, நாம் இப்பொழுதும், எதிர்காலத்திலும் உள்ள தண்டனை பற்றிய பயத்தின் காரணமாக அல்லாமல், தேவன் மீது கொண்டுள்ள அன்பினிமித்தமாக, ஆவியோடும் உண்மையோடும், அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். "**பூரண அன்பு பயத்தை** (அச்சம்) **புறம்பே தள்ளும்**" (1 யோவா. 4:8-12; 16-21; யோவா. 4:24) "**...நீதிபரரும், இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை, என்னைத் தவிர வேறொருவரும் இல்லை**" (ஏசா. 45:21) என்று அவர் தம்முடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுக்கு அறிவுறுத்துகிறார். நாம் அவரை நோக்கிப் பார்த்து இரட்சிக்கப்பட வேண்டுமென்றும், ஏனெனில், நானே தேவன், வேறொருவரும் இல்லை என்றும் போதிக்கிறார். அவர் கன்மலை; அவருடைய கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம்; அவர் நியாயக் கேடில்லாத சத்தியமுள்ள தேவன், அவர் நீதியும் செம்மையுமானவர். (உபா. 32:4).

"**வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது, பூலோகத்தையும், அதிலுள்ள யாவையும் நீரே அஸ்திபாரப்படுத்தினீர், வடக்கையும், தெற்கையும் நீர் உண்டாக்கினீர். தாபோரும், எர்மோனும் உம்முடைய நாமம் விளங்கி கெம்பீரிக்கும். உமக்கு வல்லமையுள்ள புயமிருக்கிறது; உம்முடைய கரம் பராக்கிரமமுள்ளது; உம்முடைய வலது கரம் உன்னதமானது நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும் கெம்பீர சத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள்; கர்த்தாவே, அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள். அவர்கள் உம்முடைய நாமத்தில் நாடோறும் களிகூர்ந்து உம்முடைய நீதியால் உயர்ந்திருப்பார்கள். நீரே அவர்கள் பலத்தின் மகிமையாயிருக்கிறீர்; உம்முடைய தயவினால் எங்கள் கொம்பு உயரும்.**" (சங். 89:11-17).

"**தேவன் துன்மார்க்கனை நோக்கி, நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு, சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்கு பின்னாக எறிந்து போடுகிறாய். நீ திருடனைக் காணும் போது அவனோடு ஒருமித்துப் போகிறாய். விபசாரரோடும் உனக்கு பங்குண்டு, உன் வாயை பொல்லாப்புக்கு திறக்கிறாய், உன் நாவு கற்பனையைப் பிணைக்கிறது. நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்; இவைகளை நீ செய்யும் போது நான் மவுனமாயிருந்தேன், உன்னைப் போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய்; ஆனாலும் நான் உன்னைக் கடிந்து கொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன். தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் நான் உங்களைப் பீறிப்போடுவேன், ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை. ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார்.**" (சங். 50:16-23).

"**நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்; நீங்கள் கேட்டுக் கொள்ளுவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்**" (யோவா. 15:7) சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகருடன் நல்லுறவில் இருப்பதற்கு நாம் எவ்வளவு சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்! பிரதிஷ்டை

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

செய்துள்ள உண்மையான, தேவனுடைய பிள்ளைக்கு தவறான உபதேசங்கள் யேகோவா தேவனுடைய பெயருக்கு அவமதிப்பை உண்டு பண்ணியிருக்கின்றன. அநேக பெயர்ச்சபை அமைப்புகளால் போதிக்கப்படுகிற எரிகிற நரக அக்கினி பற்றிய உபதேசமானது அன்பான தேவனுடைய குணாதிசயத்திற்கு அருவருப்பானதாக இருக்கிறது.

## தேவனுடைய கெஹன்னா அக்கினி

"**அங்கே அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலுமிருக்கும்**" (மாற். 9:44). "**சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கையில்**" (2 தீமோ. 2:15), நாம் சொல்லர்த்தமான மற்றும் உருவகமான வாக்கியங் களுக்கிடையே நாம் தெளிவாக வேறுபடுத்தி அறிந்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் நாம் அதிக குழப்பத்திற்குள்ளாகி விடுவோம். இந்த பாடப்பகுதி, பல நூற்றாண்டுகளாகவே, தேவனுடைய ஜனங்களால் அதிகமாக தவறாக புரிந்துக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. இப்பொழுதும் கூட அவர்களில் அநேகரால் மிகுதியாக தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு, சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகர் மிகவும் இரக்கமற்ற ஒருவராகவும், தந்தைக்குரிய பண்பு கொஞ்சமும் இல்லாத ஒருவராகவும் தோன்றுகிறார். இந்த நீதியுள்ள அன்பின் தேவன், உலகம் அஸ்திபாரப்படுவதற்கு முன்பாகவே மகாப்பெரிய கெஹன்னா எனும் அக்கினியை, வாதிப்பதற்கும் மற்றும் துன்பப்படுத்துவதற்கும் ஏற்படுத்தியிருக்கிறார் என்றும், அதனால் மனுக்குலத்தார் யாவரும், தகப்பனாகிய ஆதாமின் மீறுதலின் காரணமாக இந்த ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டனர் என்றும், ஆனால் இயேசுவின் மரண ஏற்பாடு மூலமாக, "**நெருக்க வழியில்**", அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கிற சிறிய எண்ணிக்கையிலானவர்கள் இந்த பயங்கரமான நித்தியத்திலிருந்து தப்பித்து கொள்வார்கள் என்றும் சிலர் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

மற்றவர்களோ அவ்வாறாக கூறாமல், தேவன் அன்பாக இருக்கிறார், இந்த அவியாத அக்கினியும், சாகாத புழுக்களும் அவசியமான காரியங்கள் தான் என்றும், அவற்றை அவருடைய அன்பு வெல்ல முடியவில்லை, ஏனெனில் ஆதியில் ஞானமின்மையினாலோ அல்லது சில வல்லமை குறைவினாலோ ஏற்பட்ட சில சறுக்குதல் காரணமாக, அது முதல் சர்வவல்லவர், வெறும் கைப்பிடி அளவு பேரை மட்டுமே, இரட்சிக்கவும், மகாதிரளான மனுக்குலத்தாரை முடிவில்லாத வாதித்தலை அனுபவிக்கவும், அங்கே அக்கினி அவியாமலும், புழு சாகாமலும் இருக்கிற நிலையில் விட்டுவிடவும், அனுமதிப்பதைக் காட்டிலும் சிறந்ததைச் செய்ய இயலாதவராகி விட்டார் என்கிறார்கள்.

நம்முடைய எஜமானரும், மகாபெரிய போதகருமானவரின் உதடுகளிலிருந்து வந்த இந்த பாடத்தின் வார்த்தைகள் கடுமையான முறையில் தவறாக புரிந்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. சிறுவயதிலிருந்தே அநேக-




ருடைய போதனை, பரிசுத்தவான்களாக தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள் மட்டுமே பரலோகத்துக்கு போவார்கள் என்றும், மற்றவர்களோ பரலோகத்தை இழந்துவிடுவது மட்டுமல்ல, ஆனால் வேதனையாகிய நித்திய ஜீவனைப் பெறுவார்கள் என்ற விளைவைத் தருவதாகவே இருந்தது. இவ்வாறாக நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனமானது, மொத்த உலகத்தாராகிய மனுக்குலத்தாரும் கட்டாயமாக சகித்துக் கொள்ளும்படியான நடைமுறையை சித்தரிப்பதாகவே புரிந்து கொள்ளப்பட்டது. இந்த நரகம், சிறுபிள்ளைகளுடைய மனங்களுக்கு வேதாகமத்துக்கு வெளியில் இருந்து பயமுறுத்தும் வெண்மையான தீயின் அனலாக சூடேற்றப்பட்ட நிலையில் சித்தரித்துக் காட்டப்பட்டது. எந்த சிருஷ்டி அப்படிப்பட்ட நிலைமைகளை நீண்ட காலத்துக்கு தாங்க முடியும் என்று நாம் ஆச்சரியத்தையோ அல்லது வியப்பையோ தெரிவித்தால், அதற்கு பதில்; தேவன் தம்முடைய சர்வவல்லமை நிறைந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நம்மை அக்கினி பற்றிக்கொள்ளாமலும், வேதனையை உணரும்படியும் செய்வார் என்பதாக இருந்தது. ஓ, மனுஷனுடைய மனதின் கற்பனைகள், எந்த அளவுக்கு அவர்களுடைய அக்கினி பற்றிக் கொள்ளாத புழுக்கள் மற்றும் ஜனங்களைப் பற்றி புரிந்துக் கொள்வதில் விசித்திரமாகிவிட்டது.

"**அவர்களுடைய புழு சாகாமலும், அக்கினி அவியாமலும் இருக்கும்**" என்கிற இந்த வேத பகுதி எருசலேமுக்கு புறம்பேயுள்ள "**இன்னோம் பள்ளத்தாக்கு**" எனும் அர்த்தங் கொண்ட கெஹன்னாவை (கிரேக்க பாஷையில்) அடையாளப்படுத்துகிறது. "**அக்கினி அவியாமலும்**" என்பது கெஹன்னாவின் அடிபாகத்தில் கந்தகம் எரிந்து கொண்டிருப்பதை சுட்டிக் காட்டுகிறது. அதன் உபயோகம் பாக்டீரியா, நோய்க் கிருமிகள் முதலியவற்றை அழித்து, அந்த பட்டணத்தின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அந்த பள்ளத்தாக்கில் வீசப்படுகிறவைகள் எதுவாயிருப்பினும், அவை எரிகிற அக்கினிக்குள் அகப்படவில்லையெனில், மேலே பாறைகள் மீதே விழுந்து கிடக்கும்பட்சத்தில், அது அங்குள்ள புழுக்கள் உண்பதற்கு அனுமதிக்கப்பட்டன. "**புழு சாகாமலும் இருக்கும்**" என்பது, அவை 'சாகாமை பெற்ற புழுக்கள்' என்று குறித்துக் காட்டாமல், ஆனால் அவை அழிவின் வேலையை செய்து முடிக்கும் வரை சாவதில்லை என்பதாகும். இந்த புரிந்து கொள்ளுதல் ஏசா. 66:24-ல் இருந்து எடுக்கப்பட்டது, "**அவர்கள் வெளியே போய் எனக்கு விரோதமாய் பாதகஞ்செய்த மனுஷருடைய பிரேதங்களைப்**

**பார்ப்பார்கள்: அவர்களுடைய புச்சி சாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும்: அவர்கள் மாம்சமான யாவருக்கும் அரோசிகமாயிருப்பார்கள்.**" தீர்க்கதரிசியினாலும், நம்முடைய கர்த்தராலும் இங்கே பயன்படுத்தப்பட்ட உருவகம், இரண்டாம் மரணத்தில் அடியோடு அழிக்கப்படுவதைக் குறித்துக் காட்டுகிறது. நாங்கள் உருவகம் என்று சொல்வதன் காரணம், மேலோட்டமாக வாசிப்பவருக்கு கூட சாவாமையுள்ள புழுக்கள் இல்லை என்பதும், நின்று போகாமல் எரிந்துக் கொண்டே இருக்கிற அக்கினி பற்றி எண்ணிப் பார்க்கவும் முடியாத காரியம் என்பதும் தெளிவாக வேண்டும் என்பதே ஆகும்.

மனுக்குலத்தாரில் கல்வியறிவு இல்லாதவர்கள் இத்தனை அநேக வருடங்களாக பெயர்ச்சபை அமைப்புகள் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டு வந்த அதிக வித்தியாசமான ஒரு காட்சியை தங்கள் மனங்களில் எண்ணி வந்தனர். தாமஸ் அக்கினாஸ் வேதபாட சாலையிலுள்ள சில இறையியலாளர்கள் இன்னும் கூட தொலைதூரத்துக்குச் சென்று, பாவப்பட்ட சிருஷ்டிகள் தங்கள் வேதனை அனுபவித்தலை சித்தரித்துக்காட்டவும், அந்த வெப்பம், ஒரு வகையான ஆஸ்பெஸ்டாஸ் மூடல் ஒன்றை உருவாக்கி அது அவ்வெப்பத்தின் தீவிரத்திலிருந்து அவர்களை ஓரளவுக்கு மறைத்து பாதுகாப்பதாகவும் காட்ட முயன்றார். ஆனால், இந்த வெளிப்புறமான மறைப்புகளில் கீறல் விழுந்து கொஞ்சம் கொஞ்சமாக ஒட்டுத் துண்டுகள் கீழே விழுகிற ஒவ்வொரு வேளையிலும் பாவப்பட்ட ஜனங்களின் வேதனைகள் அதிக தீவிரமாயிருக்கும் பொருட்டு புதிதாக மென்மையாவதற்கு விடப்படுவார் என்று அந்த வஞ்சிக்கப்பட்ட இறையியலாளர்கள் தொடர்ந்து விளக்கிட முயன்றனர்.

நிச்சயமாகவே, கடந்த காலத்தில் வாழ்ந்த இந்த இறையியலாளர்களுக்கு, இந்த புழுக்களை கையாள்வதில் சிரமம் இருந்தது. அந்த சித்திரவதையை மேற்பார்வையிடும் பிசாசுகள், பிரதான சித்திரவதை செய்பவரான சர்வவல்லமையுள்ள தேவனால் வேதனையிலிருந்து தடுப்பு தற்காப்படைந்து கொள்வதை கற்பனை செய்து பார்க்க முடிந்தது. ஆனால் அந்த புழுக்கள் எப்படி அவ்வளவு மகாபெரிய வெப்பத்தில் தாக்குபிடிப்பதையும், எந்த வகையில் எப்படி அவை அந்த பாவப்பட்ட துன்பப்படுகிறவர்களின் வேதனையை அதிகப்படுத்துகிறது என்பதையும் கற்பனை செய்து பார்ப்பது அநேகருக்கு ஒரு குழப்பமாகவே இருந்தது? ஆனால் இந்த கொடூரமான மற்றும் பிசாசுகளின் வழிகளில் சிந்தித்த சிலருக்கு, புழுக்கள் அக்கினியால் ஆனது என்றும்; அக்கினியில் வாழ்கிறது என்றும், அக்கினியில் களிகூருகின்றன என்றும், புழுக்கள் அந்த மேலோடுகளினூடே ஊடுருவி சென்று, உலக மனுக்குலத்தாரின் பயங்கரமான வேதனைகளை மேலும் அதிகமாக கூட்டும் என்கிற கோட்பாட்டை சிலர் உருவாக்குவதை சாத்தியமாக்கியது.

அப்படிப்பட்ட முடிவுகள் தம்முடைய மொழி நடையிலிருந்து பெறப்பட வேண்டும் என்று மாபெரும் போதகர் முன்னரே கருதியிருந்தாரா? மேலும் அனுதாபம் அல்லது பணிவு அல்லது அவமானத்தின் காரணமாக அவர் அது பற்றிய விளக்கங்களைச் சுருக்கமாகச் சொல்லி நிறுத்திக் கொண்டாரா? இதுதான் தேவனுடைய வார்த்தையின் பொதுவான போதனையா? அல்லது பெரிய அளவில், பயங்கரமான தவறு நடந்துவிட்டதா? மனுக்குலத்தாரில் சிலர் தங்களுடைய சக மனிதர்களின் இருதயங்களில் அச்சத்தைக் கொண்டு வரும் வாஞ்சையுடன் தங்களுடைய உடன்மனுக்குலத்தாரை பயத்துக்குள்ளாக்கி அதன் மூலம் அவர்கள் இந்த பொய்யான தலைவர்களுக்கு கீழ்ப்படிந்து இருக்கத்தக்கதாக பெரிய அளவிலான கற்பனையையும், அநேக மூர்க்கத்தனமான இலட்சிய வாதங்களுடனும் இதை ஆதரித்து வந்தனர்.

சமாரியா பட்டணத்து ஜனங்கள் மாபெரும் போதகரான தங்கள் எஜமானுக்கு தாங்கள் கேட்ட ஆகாரத்தை விலைக்கு கொடுக்க மறுத்தார்கள் என்ற காரணத்திற்காக அவருடைய சீஷர்களான யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர், அந்த பட்டணத்தின் மீது வானத்திலிருந்து அக்கினி இறங்கப்பண்ண விரும்பிய போது, அவர் இரக்கமுள்ளவராக நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்று சொன்னவராவார். (லூக். 9:55,56), அப்படிச் சொன்ன அந்த மனுஷகுமாரன் நம்முடைய மகாபெரிய பரலோக பிதாவானவர் அந்த இரண்டு தீவிரமான சீஷர்களைக் காட்டிலும் அன்பின் ஆவியையும், நீதியையும் குறைவாகவே பெற்றிருந்தார் என்று நமக்கு சொல்ல, ஏதேனும் ஞானமான நோக்கம் கொண்டிருந்தாரா? அந்த சீஷர்கள் சமாரியர்களின் பூமிக்குரிய ஜீவனை அழிக்க மூர்க்கமாக விருப்பமாயிருக்கும் போது, பரமபிதாவானவர் இன்னும் அதிகமான பேய்த்தனமான குணாம்சத்தைக் கொண்டவராக மனுக்குலமனைத்தையும், அதைக் காட்டிலும் பத்து மில்லியன் மடங்கு மோசமானதாக நடைமுறைப்படுத்துவார் என்றும், தம்முடைய பூமிக்குரிய சிருஷ்டிகளின் பாடுகளை நித்தியமாகத் தொடர்ந்து நிலைத்திருக்கும்படி செய்ய தெய்வீக வல்லமையைப் பயன்படுத்துவார் என்றும், தம்முடைய சொந்த வசனமே, அவர்கள் துர்க்குணத்தில் உருவானதாகவும், அவர்களுடைய தாய் அவர்களைப் பாவத்தில் கர்ப்பந்தரித்ததாகவும் (சங். 51:5) அறிவிக்கும் போது - அவருடைய பூமிக்குரிய சிருஷ்டிகளை, அவர்களின் சுற்றுச் சூழலும்கூட சாதகமற்றதாக இருக்கும் நிலையிலும், அவர்களுடைய எதிராளியாகிய பிசாசை தேவன் அழிக்கவும் இல்லை, கட்டிவைக்கவுமில்லை என்று இருக்கும் போது, தேவனைப் பற்றி அவர் இப்படியாகக் குறிப்பிட்டுக் காட்டும் கருத்துள்ளவராயிருந்தாரா?

## ஷியோல், ஆதேஸ் மற்றும் டார்ட்டரூ

ஆதியாகமம் முதல் மல்கியா வரையில் நரகம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் ஒரே எபிரெயச் சொல் ஷியோல் மட்டுமே என்றும் அந்த சொல் கண்மூடித்தனமாக பாதாளம், குழி மற்றும் நரகம் என்பதாக கிங் ஜேம்ஸ்




மொழிபெயர்ப்பு (KJV) வேதாகமத்தில் இருக்கிறது - அதிக எண்ணிக்கையில் குழி மற்றும் கல்லறை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதில் grave கல்லறை என்பதே சரியான மொழிபெயர்ப்பு குழி என்று நாம் புரிந்துக் கொள்ளுகிறோம். புதிய ஏற்பாட்டில் அதற்கு இணையான கிரேக்க சொல் ஹாதேஸ் என்பதாகும். இந்த வார்த்தையும் கண்மூடித்தனமாக பாதாளம் மற்றும் நரகம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் எப்போதும் grave கல்லறைக் குழி என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும். உலகில் எந்த ஒரு மெய்யான அறிஞனும் இந்த வார்த்தை-களின் மூல அர்த்தத்துடன் ஜீவன் அல்லது வேதனை அல்லது சந்தோஷம் தொடர்புடையதாயிருக்கிறது என்று மிகச்சிறிய அளவிலும் கூட உரிமை கோரமாட்டான். "ஷியோலிலே - **அங்கே, செய்கையும், வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே**" (பிர. 9:10) அவ்விடத்துக்கு நல்லோரும், தீயோருமாகிய அனைவரும் மரணத்தில் செல்கிறார்கள், அங்கே உயிர்த்தெழுதல் வரைக்கும் அவர்கள் தங்கியிருக்கிறார்கள் என்று வேதவாக்கியங்கள் திட்டவட்டமாக அறிவிக்கிறது.

புதிய ஏற்பாட்டில், 'டார்டாரு' (tartaroo) என்ற சொல் - ஒரு வினைச் சொல்லாக ஒரே ஒரு முறை வருகிறது, அது "நரகத்திலே தள்ளி" என்பதாக தவறாக மொழிபெயர்க்கப்-பட்டிருக்கிறது. "சிறைப்படுத்தி " என்று மொழிபெயர்க்கப்-பட்டிருக்க வேண்டும், அதாவது விழுந்துப் போன தூதர்கள், நம்முடைய பூமியின் ஆகாய வெளியில் சிறையாக்கப்-பட்டிருந்தார்கள் (2 பேது. 2:4; யூதா. 6; எபேசி. 2:2; 6:12). இது எந்த விதத்திலும் மனுஷர்களுக்கு என்று குறிப்புகள் இல்லை, அது விழுந்துப்போன தூதர்களுக்கே உரியது ஒரு தண்டனையாக, "தேவன் அவர்களை டார்டாரஸ்ட் - tartarused - சிறைப்படுத்தினார்;" எனவே அவர்கள் "**மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்**" என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

## கெஹன்னா

ஷியோல், ஹாதேஸ் மற்றும் டார்டாரூ ஆகியவை மீதான வெளிச்சத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு நாம் இப்பொழுது, (KJV) கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் நரகம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கெஹன்னா பற்றி பேசுவோம். கெஹன்னா என்ற இந்த கிரேக்க வார்த்தை பன்னிரெண்டு தடவைகள் வருகின்றது. அந்த இடங்கள் பின்வருமாறு:மத். 5:22,29,30; 10:28; 18:9; 23:12,33; மாற். 9:43,45,47; லூக். 12:5; யாக். 3:6. அவைகளில் ஒன்று, மேலே சொல்லப்பட்ட நம்முடைய வசனத்துடன் தொடர்புடையதாயிருக்கிறது. கெஹன்னா என்ற இந்த வார்த்தை எதைக் குறித்துக் காட்டுகிறது? என்பது தான் கேள்வி. இது உத்தரிக்கும் ஸ்தலத்துக்கான ஒரு பெயரா? அல்லது புரட்டஸ்டண்ட் சபை கொள்கைகள் அறிவிக்கிறபடி அதை விடவும் மோசமான ஒரு இடத்துக்கான முடிவில்லாத சித்திரவதை நடக்கும் ஒரு இடத்துக்கான பெயரா? இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். இது இரண்டாம் மரணத்தை அடையாளப்படுத்த பயன்படுத்துகிற ஒரு உருவக அணியாகும். உயிர்த்தெழுதல் இல்லாத, உயிர்ப்பிக்கப்படுதல் இல்லாத ஒரு மரணம்; பரி.பவுலினால் குறிப்பிடப்படும் நித்திய அழிவு, இதைப்பற்றி பரி.பேதுரு அதை அனுபவத்தில் பெறுகிறவர்கள் மிருகங்களைப் போலவே சாகிறார்கள் என்று சொல்கிறார். (2 தெச. 1:9; 2 பேது. 2:12). இது வெளி. 20:14-ல் மிகவும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது, அங்கே இது "அக்கினி கடல்" என்று அறிவிக்கப்படுகிறது, "இதுவே இரண்டாம் மரணமாகும்."

## தோப்பேத்

எரே. 19:12-15 கூறுகிறதாவது: "**இவ்விதமாக நான் இந்த ஸ்தலத்துக்கும், அதின் குடிகளுக்கும் செய்து, இந்த நகரத்தை தோப்பேத்துக்கு சரியாக்குவேன். எந்த வீடுகளின் மேல் வானத்தின் சகல சேனைக்கும் தூபங்காட்டி, அந்நிய தேவர்களுக்கு பானபலிகளை வார்த்தார்களோ, அந்த வீடுகளாகிய எருசலேமின் வீடுகளும், யூதாவுடைய ராஜாவின் வீடுகளும் தோப்பேத் என்கிற ஸ்தலத்தைப்போல் தீட்டுப்பட்டவைகளாய் இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார். பின்பு எரேமியா, கர்த்தர் தன்னை தீர்க்கதரிசனஞ்சொல்ல அனுப்பின தோப்பேத்திலிருந்து வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்திலே நின்று கொண்டு எல்லா ஜனங்களையும் பார்த்து, இதோ நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாதபடிக்கு உங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினபடியினால் நான் இந்த நகரத்துக்கு விரோதமாய்ச் சொன்ன எல்லா தீங்கையும் இதின் மேலும் இதற்கடுத்த பட்டணங்களின் மேலும் வரப்பண்ணுவேன் என்று இஸ்ரயேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.**"

இன்னோம் பள்ளத்தாக்கைப் பற்றி நாம் மேலும் அறிந்து கொள்வதற்கு இருக்கிறது; 'கெஹன்னா' என்னும் கிரேக்க சொல்லானது 'கெஹின்னோம்' என்ற எபிரெய சொல்லுக்கான ஒரே பொருள் தரும் வார்த்தையாகும், அதற்கு இன்னோம் பள்ளத்தாக்கு என்று அர்த்தம், இந்த பள்ளத்தாக்கு மீண்டும் மீண்டுமாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது இன்னோம் என்று பெயரிடப்பட்ட ஒரு குடும்பத்தாருக்கு சொந்தமானது. அதற்கான முதல் குறிப்பு யோசு. 15:8-ல் உள்ளது. எருசலேம் பட்டணத்தை எந்த வேதாகம வரைபடத்தில் பார்த்தாலும், அந்த பட்டணத்தின் மதிலுக்கு தெற்கு புறமாகவும், தென்மேற்கிலும் இந்த பள்ளத்தாக்கு காணப்படும்.

இஸ்ரயேலர்கள் விக்கிரக ஆராதனையில் மிகவும் வருந்தத்தக்க விதத்தில் மூழ்கியிருந்தவர்களாக மாறியிருந்த காலகட்டத்தில், இன்னோம் பள்ளத்தாக்கு புனிதமான ஒரு இடமாக பயன்படுத்தப்பட்டிருந்தது, புறமத தெய்வமான மோளேகின் சொரூபம் வெண்கலத்தில் உள்புறம் வெறுமையானதாக செய்யப்பட்டு அங்கே நிறுத்தப்பட்டிருந்தது. அந்த சொரூபத்தின் ஒரு பாகமாயிருந்த அமருமிடத்தில் உலை ஒன்று பின்புறத்திலிருந்து எரியூட்டப்படும்படி கட்டமைக்கப்பட்டிருந்தது, அந்த சொரூபத்தின் தலை புகைபோக்கியின் உச்சிப்பகுதியாக இருந்தது. அந்த சொரூபம் எதையோ பெற்றுக் கொள்வது போல தன் கைகளை நீட்டிக் கொண்டிருந்தது. அது சூடேற்றப்பட்டு, நெருப்பினால் சிவந்து ஜொலித்துக் கொண்டிருக்கும். அதில் வஞ்சிக்கப்பட்ட இஸ்ரயேலர்கள் தங்கள் பிள்ளைகளை பலியிடுவதற்கு வைப்பதற்கான பாத்திரமாயிருந்தது, எக்காளங்கள் ஊதப்பட்டு, மேளங்கள் அடிக்கப்படுகையில், ஜனங்கள் கூச்சலிட்டு, சித்திரவதை செய்யப்படுகிற குழந்தைகளின் கதறலை அதிகம் கேட்காதபடிக்கு அடக்கினர். யோசியா என்னும் நல்ல ராஜா சிங்காசனத்தில் வந்த போது, இந்த விக்கிர ஆராதனை முறை அழிக்கப்பட்டதுடன், ஆலயத்தில் சரியான முறையில் தேவனை தொழுது கொள்ளுதல் மீண்டும் தொடங்கியது. (2 ராஜா. 23:10).

பின்பு இப்படிப்பட்ட கோரமான வழக்கங்களுக்கு இனி ஒருபோதும் ஜனங்கள் திரும்பாதபடிக்கு, இன்னோம் பள்ளத்தாக்கு களங்கப்படுத்தப்பட்டது. அது அருவருப்பான பள்ளத்தாக்காக மாறிவிட்டது. அது எருசலேமின் அசுசிகள் எல்லாவற்றையும் கொட்டக்கூடிய குப்பை கூடமாக மாறியது. செத்துப்போன மிருகங்கள் அங்கே எறியப்பட்டன. அத்துடன் சில இழிவான குற்றவாளிகள் தூக்கிலிடப்பட்ட பின்பு – பிரேதத்தை அடக்கம் பண்ணுவதற்கு கொடுக்கப்படுவதற்கு பதிலாக அங்கே தூக்கி வீசினர் – முடிவாக திருத்தப்பட முடியாதவர்களுக்கு எந்த எதிர்கால ஜீவியமும் இல்லை – அதாவது அவர்கள் பயனற்றவர்களாக தள்ளப்பட்டவர்கள் என்பதை அடையாளமாக விளக்குவதற்காக அப்படி செய்யப்பட்டது.

இன்னோம் பள்ளத்தாக்கு இப்போது நிரப்பப்பட்டு, பழத்தோட்டம் அங்கே வளர்க்கப்பட்டு வருகிறது; ஆனால் ஆரம்பத்தில் அது மிகவும் ஆழமான பகுதியாயிருந்தது. மிருகங்களின் சடலங்கள் அழிக்கப்பட்டு போவதற்காக அங்கே தூக்கி வீசப்பட்டன. அவற்றின் மீது புழுக்கள் உருவாகி அவைகளை உணவாக தின்று கொண்டிருந்தன; அவை முழுவதும் அழிக்கப்படுவதற்கு அந்த புழுக்களின் வேலையை ஒருவரும் தடுக்க நாடவில்லை. அந்த பள்ளத்தாக்கின் அடியில் அக்கினி தழல்கள் எரியத்தக்க பொருள் எவையெல்லாம் அங்கே வீசப்படுகிறதோ, அவற்றை பட்சிப்பதற்காக தூண்டி எரியச் செய்யப்பட்டன; மேலும் கந்தகம் சேர்க்கப்பட்டு, அதன் புகைகள் எந்த நோய்கிருமியையும் அழிக்கும்படி செய்யப்பட்டது. அந்த அக்கினியை அணைத்துப் போட ஒருவரும் சிந்தித்ததில்லை; அது அப்படியிருக்கவே விரும்பினர், இதுவே நம்முடைய கர்த்தருடைய நாளின் 'கெஹன்னாவாக' இருந்தது.

## கெஹன்னாவின் மெய்யான முக்கியத்துவம்

இயேசு கெஹன்னாவை முற்றிலும் துணிகரமான பாவிகள் எல்லாருக்குமுரிய இடமாக இருக்கப்போகிற இரண்டாம் மரணத்தை விளக்கிக் கூறுவதற்கு உருவமாக அல்லது சித்திரமாக பயன்படுத்தினார். அவர் இதனை மற்ற அடையாளங்களோடு சேர்த்து வெளிப்படுத்தின விசேஷம் எனும் புஸ்தகத்தில் உள்ள பிறஅடையாளங்களுடனும் தொடர்புபடுத்தியும் பயன்படுத்தியுள்ளார். அவர் இதனை இரண்டாம் மரணத்தை அர்த்தப்படுத்துவதாக விளக்குகிறார். (வெளி. 20:14,15; 21:8)

அந்த பள்ளத்தாக்கின் புழுக்கள் வேறெந்த புழுக்கள் அல்லது மாம்ச புழுக்களைக் காட்டிலும் அதிகமாக சாவாமையைப் பெற்றிருக்கவில்லை; மேலும் அங்கே தூண்டப்பட்ட அக்கினி இப்போதும் எரிந்துக் கொண்டே இருக்கவில்லை, அவர்களுடைய புழு சாகவுமில்லை – அக்கினி அவியவுமில்லை என்று இங்கே சொல்லப் பட்டிருப்பது, இங்கே குறித்துக் காட்டப்படுகிற அந்த வகுப்பாரின் அழிவு முடிவடைகிறது என்பதையும், அந்த ஒட்டு மொத்தமான முழுமையான அழிவாகிய நிர்மூலமாக்கப் படுதலிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு எதுவும் தலையிடுவதில்லை என்பதை மட்டுமே அடையாளப் படுத்துகிறது. வேத வாக்கியம் அறிவிக்கிறபடி ஆதாமிய மரணமானது, அழிக்கப்பட்டுவிடும். ஆதாமிய மரணத்தை அழித்துப் போடவும், அவருடைய தயவை ஏற்றுக் கொள்கிற ஆதாமின் சந்ததியார் எல்லாரும் உயர்த்தப்படவும், ஆதாமில் இழக்கப்பட்டு, கல்வாரியில் மீட்கப்பட்ட எல்லாவற்றையும் திரும்ப பெற்றுக் கொள்ளச் செய்வதற்கும், உரிமையுள்ள அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் படியாகவுமே கிறிஸ்து மரித்தார். ஆனால் தேவனுக்கும், நீதியை நேசிக்கிற எல்லாருக்கும், இரண்டாம் மரணம் ஒரு நண்பனாயிருக்கிறது; ஏனெனில் முழு அளவிலான பிரகாசிப்பித்தலுக்கு பின்பு பாவத்தின் மீது அன்பு அல்லது ஒத்துணர்வு கொண்டவர்கள் மற்றும் தெய்வீக சித்தத்திற்கு கீழ்ப்படிய மறுப்பதாலும், அது அப்படி மறுத்தவர்களை முற்றிலுமாக என்றென்றைக்குமாகவும் அழித்துவிடும்.

பூமிக்குரிய எருசலேம் பரம எருசலேமாகிய மேலான எருசலேமுக்கும், பூமியனைத்தின் மேலும் ஸ்தாபிக்கப்படப்

> கெஹன்னா (கிரேக்க வார்த்தை) என்பது
> இரண்டாம் மரணத்தை அடையாளப்படுத்துவதற்கு
> உபயோகிக்கப்பட்டிருக்கும் உருவக அணியாகும்.
> அதாவது அதிலிருந்து உயிர்த்தெழுதலே இல்லாத மரணமாகும்.
> "அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே
> தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே
> எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன்
> அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்." வெளி.20:14,15

போகிற தேவனுடைய ராஜ்யத்துக்கும் உருவகமாயிருந்தது போல கெஹன்னாவும், அதன் அக்கினி மற்றும் புழுக்களும் ஒவ்வொரு துணிகரமான பாவியின் மீதும் வருகிற இரண்டாம் மரணமாகிய அழிவை முன்னடையாளமாகக் காட்டியது. பூமியின் மீதுள்ள செம்மறி ஆட்டைப் போன்ற மனுக்குலத்தாருக்கு நீதியுடன் முழுவதுமாக ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக, கிறிஸ்துவின் மத்தியஸ்தர் ஆட்சியிலும், அதன் முடிவுக்கு பின்பு கொஞ்ச காலத்திலும் அந்த அழிவாகிய இரண்டாம் மரணம் சம்பவிக்கும்.

புதிய எருசலேம் சொல்லர்த்தமான பொன்னாலான வீதிகளும் முத்துக்களாலான வாசல்களும், நவரத்தினங்களாலான மதில்களும் கொண்ட சொல்லர்த்தமான பட்டணமாயிராதது போல, இன்னோம் பள்ளத்தாக்கோ அல்லது நகரத்துக்கு வெளியேயுள்ள அக்கினி கடலோ இரண்டுமே அடையாளமானவை. ஒரு சொல்லர்த்தமான புதிய எருசலேம், தேவனுடன் இசைவுள்ளதாயும், தெய்வீக ஆசீர்வாதமும், நித்திய ஜீவனுமுள்ளதாக குறித்துக் காட்டுகிற அதே வேளையில்; இன்னோம் பள்ளத்தாக்கும், அக்கினி கடலும் மெய்யாகவே, தேவனிடமிருந்து பிரிந்திருப்பதையும், நித்திய அழிவையும் நிர்மூலமாக்கப்படுதலாகிய இரண்டாம் மரணத்தையும் குறித்துக் காட்டுகிறது. அக்கினி ஒருபோதும் பாதுகாப்பதற்கான அடையாளமாக பயன்படுத்தப்படுகிறதில்லை. அதிலிருந்து மாறானதைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது. அது எப்போதுமே அழிவிற்கு ஒரு அடையாளமாகும். கந்தகம் கூடுதலாக சேர்க்கப்படுவது என்பது அந்த உருவகத்தை தீவிரப்படுத்துகிறது, ஏனெனில் கந்தகத்தை எரிப்பது பழங்கால உலகத்தாருக்கு அறியப்பட்ட மரணத்துக்கேதுவான தாக்கங்களில் ஒன்றாக இருந்தது. அது மனுக்குலத்தாருக்கும், பெரிய விலங்குகளுக்கும் மரணத்துக்கு ஏதுவாயிருப்பது மட்டுமல்லாமல், பூச்சிகள் மற்றும் நுண்ணுயிரிகள் மற்றும் உயிருடனுள்ள எல்லாவற்றுக்கும் கூட மரணத்தை விளைவிக்க கூடியதாக இருக்கிறது.

துணிகரமாக மீறுதலுக்குட்படுகிறவர்களின் அழிவு பற்றி இந்த பாடம், இன்னோம் பள்ளத்தாக்கின் (கெஹன்னா) அழிவில் குறித்துக் காட்டப்பட்டிருப்பது ஏசா. 66:24-ல் தீர்க்கதரிசியால் கொடுக்கப்பட்டுள்ளது: "**அவர்கள் வெளியே போய் எனக்கு விரோதமாய் பாதகஞ் செய்த மனுஷருடைய பிரேதங்களைப் பார்ப்பார்கள்: அவர்களுடைய பூச்சி சாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும்: அவர்கள் மாம்சமான யாவருக்கும் அரோசிகமாயிருப்பார்கள்.**" ஏசாயாவின் நாளிலும் நன்கு பழக்கத்தில் இருந்த சொல்லர்த்தமான அந்த இன்னோம் பள்ளத்தாக்கு, உருவகமாக பரிசுத்த ஆவியால் அவர் மூலம் பேசப்பட்டு நிறைவேறுதலை சுட்டிக் காட்டியதுடன், புதிய வானங்கள் மற்றும் புதிய பூமியாகிய - மனுக்குலத்தாரில் புதிய மத சம்பந்தமான மற்றும் உலகப்பிரகாரமான அமைப்புகளையும், அவைகள் மேசியாவின் அரசாட்சி மூலமாக நிறைவேற்றப்படுவதையும், அதன் பின்பு தீமை செய்பவர்கள் தப்புவிக்கப்படாமல், முழுவதும் முற்றிலுமாக அழிக்கப்படுவதையும் கூறி, நிறைவேறுதலைச் சுட்டிக் காட்டுகிறது. நித்திய வேதனையில், ஜீவனுள்ள உயிர்கள் சித்தரவதை அனுபவிப்பதை பார்ப்பதாக ஒன்றுமே சொல்லப்படவில்லை, சொல்லப்பட்டுள்ள கருத்தும், அது அல்ல. பிரேதம் என்பது இறந்த உடலாகும். தேவன் ஒருபோதும் சித்திரவதையை அங்கீகரிக்கவில்லை, ஆனால் எப்போதுமே அதை கடிந்து கொண்டுள்ளார். (எரே. 19:5; 32:35).

தேவனுடைய மிகப்பெரிய திட்டத்தில், மிகக் கொடிதான சித்திரவதை அனுபவிக்கும் இடமும், அதில் கணக்கற்ற அநேகமாயிரம் சிருஷ்டிகள் வேதனை அனுபவித்துக் கொண்டிருப்பதும் அடங்கியிருக்கவில்லை என்பதை உணர்ந்து நாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைய வேண்டும். ஆனால், வேத வாக்கியம் சொல்கிறபடி, வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும், வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன். (வெளி. 5:13).

வேதாகமமோ அல்லது பகுத்தாராய்தறிதலோ, நித்திய வேதனையே பாவத்திற்கான தண்டனையாயிருக்கிறது என்ற கோட்பாட்டுக்கு கொஞ்சமும் ஆதரவளிக்கவில்லை என்பது நிரூபித்துக் காட்டப்பட்டிருக்கையில், பல்வேறான சபை கொள்கைகள், பாவ அறிக்கைகள், துதிபாடல் புத்தகங்கள் மற்றும் இறையியல் ஆய்வு கட்டுரைகள் மட்டுமே அதற்கு ஆதரவளிக்கின்றன என்ற உண்மையை நாம் கவனிக்கிறோம்; மேலும் நம்முடைய நாளில் அதிகரித்துக் கொண்டிருக்கும் வெளிச்சத்தின் கீழாகவும், அதன் விளைவான பகுத்தாராய்தலின் விடுதலையினாலும், இந்த பயங்கரமான, கொடூரமான இருண்டயுக கோட்பாடு மீதுள்ள நம்பிக்கை விரைவாக செத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தோ பரிதாபம்! இது கிறிஸ்தவ ஜனங்கள் பொதுவாக தேவனுடைய வார்த்தையின் சத்தியம் மற்றும் அவருடைய குணாம்சத்திற்காக வைராக்கியமாயிருந்ததினாலும், அவர்களுடைய கொடிய விக்கிரக ஆராதனை கொள்கைகளை அழித்திட விருப்பமுள்ளவர்களாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிற ஊழியக்காரனாகவும் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி கற்றுக் கொள்ளும் காரணத்தாலும் அல்ல. (2 தீமோ. 2:15).

தேவனுடைய வார்த்தை சரியாக பகுக்கப்பட்டு, உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்கள் என்றும், ஆனால் மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் என்றும் அது பேசுகிறது. (பிர. 9:5); மேலும் பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகர் மரண (பிரேதக்குழி) நிலைமையிலிருந்து எழுந்திருப்பார்கள் (தானி. 12:2); தேவன் நியமித்த காலத்தில், யேகோவா தேவனுடைய வாக்குத்தத்தமானது யோவா. 5:28,29-ல் கொடுக்கப்பட்டபடியே தன் வேலையைச் செய்யும்: "**இதைக்**

**குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்: ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும் அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்**" (ASV), மரண நித்திரையில் இருப்பவர்கள் யாவரும் மரணநிலைமையிலிருந்து எழுப்பப்பட்டு, மேசியா பூமியின் மீது ஆளுகை செய்ய வரும்போது நீதியைக் கற்றுக் கொள்வார்கள். ஆகவே அவர்கள் இவ்வாறாக மரண நிலையில் இருக்கும் போது, உணர்வு இன்றி இருக்கிறார்கள், அவர்கள் வாதிக்கப்படும் நிலையிலுமில்லை, ஆசீர்வாதமான நிலையிலுமில்லை. நல்லவர்கள் ஜீவனை அடையும்படி திரும்பி வருவார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. (எனவே அவர்கள் உயிர்த் தெழுதல் வரை ஜீவனோடிருக்கவில்லை); மற்றும் துன்மார்க்கர் நீடித்த அவமானத்திற்கும், இகழ்ச்சிக்கும் ஆளாவார்கள் என்று கூறப்படுகிறது. ஆம், ஒழுங்குமுறைகளை கற்றுக் கொள்வதற்கான சரியான சமயத்திற்குப் பின்பு மனுக்குலத்தாரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் இகழ்ச்சிக்கும், நித்திய நிந்தைக்கும் (கெஹன்னா, நித்திய மரணம்) இரண்டாம் மரணத்துக்குமாக நியாயத் தீர்ப்படைவார்கள். (வெளி. 20:14,15; 21:8). ஒபதியா 16-ல்: "**அவர்கள் இராதவர்களைப் போல் ஆவார்கள்**" (ஆங்கில வேதாகமம் பார்க்கவும்) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

யேகோவா தேவன் தம்முடைய வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில், "**அப்பொழுது மரணமும், பாதாளமும் அக்கினி கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாக காணப்படாதவனெவனோ அவன் அக்கினி கடலிலே தள்ளப்பட்டான்**" (வெளி. 20:14,15) என்ற இந்த வசனங்களுடன் நம்முடைய பாடத்தை சுருக்கமாக விளக்கி முடிக்கிறார், பின்பு பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கான அவருடைய இரட்சிப்பின் திட்டம் நிறைவேற்றமடைகிற இந்த வாக்குத்தத்தத்தை நாம் வாசிக்கிறோம் : "**மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன், அது இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார், அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார் அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்: இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை: முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது**" (வெளி. 21:3,4).

"தேவனுடைய ஆசரிப்புக்கூடாரம்/வாசஸ்தலம்" ஒரே மெய்யான சபையாக இருக்கிறது; அது நிரந்தரமானதாகவோ அல்லது நித்தியமான நிலையிலுள்ள காரியங்களாக இருக்கப் போவதில்லை என்ற காரணத்தால், ஆசரிப்புக் கூடாரம் என்றழைக்கப்படுகிறது. யுகங்களைப் பற்றிய தேவனுடைய திட்டம் அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதில் முன்னோக்கிச் செல்கிறது. இஸ்ரயேலர்கள் தங்கள் மத சம்பந்தமான ஆராதனைகளில் அடையாளமான ஆசாரிப்புக் கூடாரத்தைக் கிட்டிச் சேர்ந்தது போல, மனுக்குலத்தார் தேவனை கிட்டிச் சேருகிறார்கள். "தேவன் தாமே" ஆம், ஆயிர வருட ராஜ்யம் தேவனுடைய அருமை குமாரனுடைய ராஜ்யமாகவும் இருக்கும் போது, அது தேவனுடைய ராஜ்யமாகவும் இருக்கும். ஏனெனில் தேவனுடைய அருமை குமாரனும், ஒரே மெய்யான சபையும் பிதாவுடன் இசைவிணக்கமாக இருப்பார்கள், யூதா 21, "**தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள்**" என்று சொல்லுகிறது. இந்த பாடத்தில் "உங்களை" என்பது சிறுமந்தையினருக்கு எழுதப்பட்டது; தாற்பரியத்தின் அடிப்படையில் இது இப்போது சுத்தமான வாலிபரான பாத்திரவான்களுக்கும், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களுக்கும் பொருந்துகிறது. அவர்கள் அப்படிப்பட்டவர்களாயிருப்பதன் காரணமாகவே, அவர்கள் தேவனுடைய அன்பை அடைந்து கொள்ள நாடுவதுடன், அவர்களுடைய தற்கால அழைப்பு மற்றும் அவர்களுடைய எதிர்கால எதிர்பார்ப்புகளின் காரணமாக அதை காத்துக் கொள்ளவும் வேண்டும். 2 தீமோ. 1:7-ஐப் பற்றி ஒரு தெளிவான புரிந்துக் கொள்ளுதலை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார், "**தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.**" "நமக்கு" என்பது குறுகிய கருத்தில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தவர்களையும், ஆனால் கோட்பாட்டின்படி இது இப்போது சுத்தமான வாலிபரான பாத்திரவான்களுக்கும், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களுக்கும் பொருந்துகிறது. (PT 1985, பக்கம் 25).

மேக ஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் நேரடியாக சரியான ஆசரிப்பு கூடாரத்தின் மீது மாத்திரம் தங்கியிருந்தது; அது பிரகாரத்தின் மீதோ அல்லது பாளையத்தின் மீதோ நிற்கவில்லை. அது பொதுவாக சித்தரிக்கப்படுகிறபடியே நேரடியாக சரியான ஆசரிப்புக் கூடாரத்தின் மீது மாத்திரம் நின்றது. தேவன் இப்போது பொருத்தமான பிரகாசிப்பித்தலையும், ஆசீர்வாதத்தையும் மகிமையான கிறிஸ்துவுக்கு கொடுப்பதால் மட்டுமே, இவைகள் நிறைவேறுதலான பிரகாரத்திலிருப்பவர்களுக்கும், பாளையத்தில் பிரதிஷ்டை செய்திருப்பவர்களுக்கும், தற்காலிகமாக நீதிமானாக்கப்பட்டவர்களாகிய மெய்யாகவே மனந்திரும்பி விசுவாசிப்பவர்களுக்கும் கடத்தப்படும். மூப்பரான பாத்திரவான்கள் தங்கள் நாளில் இருந்தது போலவே, எபிஃபெனி பிரகாரத்திலும் எபிஃபெனி பாளையத்திலும் உள்ள பிரதிஷ்டை செய்தவர்கள் இவ்வாறாக இப்போது தேவன் தங்கியிருக்கிறதும், ஜனங்களை சந்திக்கிறதும் ஆசீர்வதிக்கிறதுமான ஸ்தலமாக இருக்கிறார்கள். "யுகங்களுக்கிடையே பிரதிஷ்டை செய்கிறவர்களுக்கு" தேவன் எப்படிப்பட்ட அற்புதமான சிலாக்கியத்தைக் கொடுத்திருக்கிறார். உலகத்தார், "அப்படிப்பட்ட சிலாக்கியம் கொடுத்திருப்பதைப் பற்றி கேலி பேசி இகழ்ந்தால், அது அப்படியே செய்யட்டும்; ஆனால் தேவனுடைய சத்தியம் மற்றும் ஆவியைப்

பெற்றுக் கொள்பவரும், களஞ்சியமாக இருப்பவரும் கிறிஸ்துவே என்ற உண்மையை, அது கொஞ்சம்கூட மாற்றாது. (ஆவிக்குரிய தெரிந்தெடுக்கப்படுபவர்கள் எல்லாரும் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டதினால், யுகங்களுக்-கிடையில் பிரதிஷ்டை செய்பவர்களாகிய வாலிபரான பாத்திரவான்களும், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களுமே இந்த மகத்தான தயவை இப்பொழுது பெற்றுக் கொள்கிறவர்களாயிருக்கிறார்கள்)." (PT 1984, பக்கம் 46).




வெளி. 21:4-ல்: "**அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்: இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது**" என்று கொடுக்கப்பட்டபடி, மாறப் போகிற ஐந்து காரியங்கள் பற்றிய சிந்தனைகளின் சில வெளிப்பாடுகளுடன் நாங்கள் இந்த வேதபாடத்தை முடிவுக்கு கொண்டு வருகிறோம்.

(1) "**கண்ணீர் யாவையும்**" ஓ, வேதனை மற்றும் ஏமாற்றத்-தின் கண்ணீர் யாவும் இனி ஒரு போதும் மனுக்குலத்தாரின் கன்னங்களில் வழிந்தோடுவதில்லை, மாறாக, திரும்ப கொடுத்தலின் வேலை மரணமாகிய சாபத்தை நீக்கிப் போடுவதால் ஆனந்த கண்ணீர் வழிந்தோடும்.

(2) "**இனி மரணமில்லை,**" ஓ, யோவா. 5:28,29-ல் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம், இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம், பிரேதக்குழிகளில் நித்திரை-யாயிருப்பவர்கள், புறப்பட்டு வந்து, பரிசுத்த பெரும் பாதையில் தங்கள் நடையை தொடங்குவார்கள்.

(3) "**துக்கமுமில்லை,**" பாவத்தின் கறை இனி ஒரு போதும் மனுக்குலத்தாரின் மனங்களை கெடுப்பதுமில்லை. மனுக்குலத்தார் பரிசுத்த பெரும்பாதையில் முன்னேறிச் செல்வதால், எந்த கசப்பான எண்ணமோ அல்லது அன்பற்ற வார்த்தையோ இருப்பதுமில்லை, அத்துடன் அவர்கள் தங்கள் பிரதிஷ்டையில் உண்மையாயிருப்பார்களெனில், நித்திய ஜீவனுக்குரிய ஆசீர்வாதத்தையும் அடைந்து கொள்வார்கள்.

(4) "**அலறுதலுமில்லை,**" ஆதாமின் சாபத்தின் விளைவான சோகத்தின் கண்ணீர், ஆனந்த கண்ணீராக மாறும்; ஒரு கணம் மனுஷனுடைய தைரியம் தவறினாலும், தேவனுடைய அன்பிரக்கம் அவனை கனிவாக முன்னோக்கி உந்தித் தள்ளும்; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலோ களிப்புண்டாகும்.

(5) "**வருத்தமுமில்லை,**" நோய்கள் பொதுவாக குணமாகு-தல், மேசியாவின் ராஜ்யத்தின் பிரதானமான அம்சமா-யிருக்கும், சரீரத்தில் சுகமாகுதல் மட்டுமல்ல, ஆனால் அநேக நூற்றாண்டுகளாக இருந்து வந்திருக்கிற, பாவத்திலிருந்தும் சுகமாகுதல் இருக்கும், உலகத்தின் மாபெரும் மருத்துவமனை கிறிஸ்துவின் ஆயிர வருட மத்தியஸ்தர் ஆட்சி செயல்பாட்டில் இருக்கும்போது முழுமை-யாக இயங்குவதாயிருக்கும், மனுக்குலத்தார் யாவரும் மகாப்பெரிய மருத்துவர் மற்றும் அவருக்கு கீழான மருத்துவர்களின் கரங்களின் கீழ் இருப்பார்கள். மனுக்-குலத்தார் எல்லாரும் தேவனுடைய சித்தத்தை செய்ய நாடுவதால், தங்கள் பாதையில் வெளிச்சத்தைப் பெற்றிருப்பார்கள். ***

# யாக்கோபின் இக்கட்டுக் காலம்

## The Time of Jacob's Trouble

"**ஐயோ! அந்த நாள் பெரியது: அதைப்போலொத்த நாளில்லை, அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்: ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்." எரே. 30:7.**

"யாக்கோபின் இக்கட்டு" என்னும் சொற்றொடர் வேதாகமத்தில் இந்த ஒரே ஒருமுறை மட்டுமே காணப் படுகிறது; இந்த விசேஷமான உபத்திரவம், சுவிசேஷ யுகத்தின் முடிவில் மாம்ச இஸ்ரயேலர் மீது வருகிறதாக இருந்தாலும் கூட இது மற்ற தொடர்புகளாலும்கூட விவரிக்கப்பட்டு குறித்துக் காட்டப்படுகிறது. எரேமியா 30 மற்றும் 31-ம் அதிகாரங்களில் தீர்க்கதரிசியானவர் இஸ்ரயேலரின் மீட்பு மற்றும் எதிர்காலத்தில் அவர்-களுடைய மகிமையான சூழ்நிலை ஆகியவை குறித்த யேகோவா தேவனிடமிருந்து வந்துள்ள செய்தியுடன் இஸ்ரயேலை ஊக்கப்படுத்துகிறார். தேசங்களுக்கு எதிராக தேவனுடைய மகா கோபம் மற்றும் நியாயத்தீர்ப்பின் போது, அவர்கள் மீது சுமத்தப்பட்ட பாரத்திலிருந்து அவர் இஸ்ரயேலை விடுவிப்பார். (எரே. 30:4-11). இந்த நாளின் தொடக்கம் 1874-ல் தொடங்கிய ஆயிர வருட யுகத்துடன் சம்பந்தமுடைய ஒரே கால நிகழ்ச்சியாக, ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து 6000 வருடங்கள் முடிந்த 1872-ற்கு சற்றே அப்புறம் துவங்குகிறது. இந்த நாளின் அழிவுக்குரிய உபத்திரவம் தேசங்கள் மீது 1914-ல் உலக மகா யுத்தத்தின்

### யாக்கோபின் இக்கட்டுக்காலம் வந்துகொண்டிருக்கிறது!

முதல் பகுதியோடு தொடங்கியது. இஸ்ரயேலின் விழுந்துபோன நிலைமை நியாயப் பிரமாணத்தின் கீழ் சீர்படுத்தப்பட முடியாததாயிருந்தது, அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தம் தேவன் அவர்களைத் தண்டித் தார். (சங். 107:17); ஆனால் அவர் அவர்களைத் தம்முடைய தயவுக்கு மீண்டும் கொண்டு வந்து, அவர்களுடைய பாவங்களினிமித்தம் அவர்கள் மேல் வரப்பண்ணின கொடூரமான காயங்களை குணமாக்கு–வதுடன், அவர்களைத் துன்புறுத்திய விரோதிகளையும் தண்டிப்பார். (எரே. 30:12-17). அவர் இஸ்ரயேலைத் தம்முடைய ஜனமாக மீண்டும் கட்டுவார். (எரே. 30:18-22; ஆமோ. 9:11; அப். 15:15,16 உடன் ஒப்பிடுக). தேவனுடைய மகா பெரிய உக்கிர கோபம் மகா உபத்திரவ காலத்தில் அவருடைய நோக்கங்கள் நிறைவேறித்தீரும் வரைக்கும், முடிவு பெறாது; ஆயிர வருட யுகத்தின் தொடக்க காலத்துடன் சுவிசேஷ யுகம் இணைந்து கவிந்து காணப்படும் முடிவான காலத்தில் அவருடைய ஜனங்கள் இதனைச் சிந்திப்பார்கள். (எரே. 30:23,24).

அதே சமயத்தில், முக்கியமாக ஆயிர வருட யுகத்தின் போது, (1874-2874) இஸ்ரயேலின் சகல குடும்பங்களுக்கும் யேகோவா தேவனாயிருப்பார்; அவர்கள் தங்களுடைய உடன்படிக்கை சம்பந்தத்தின் பலனாக அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். (எரே. 31:1-6). ஆயிர வருட யுகத்தின் தொடக்கத்தில், அவர் இஸ்ரயேலின் மீதியான ஜனத்தை வடதேசத்திலிருந்து கூட்டிச் சேர்த்து, அவர்களை ஜன சமுதாயமெங்கி–லுமிருந்து கூடி வரப்பண்ணி, மகா கூட்டமாய் அவர்களைத் திரும்ப தங்கள் சுதந்தரத்துக்கு திரும்பும்படி வழிநடத்தி, அவர்களைத் தம்முடைய ஆசீர்வாதங்களால் சந்தோஷமும், திருப்தியும் அடையச் செய்வார். (வசனங்கள் 7-14). தேவனுடைய ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, மரணத்தில் இழந்து போன அவர்களுக்கு அன்பானவர்களை திரும்ப மீட்டுக் கொடுப்பார். (வசனங்கள் 15-17). மனந்திரும்புகிற பத்து இஸ்ரயேல் கோத்திரத்தார் மீதும் (எப்பிராயீம், வசனங் கள் 18-22) தவறுக்காக வருந்துகிற இரண்டு கோத்திரத் தார் மீதும் (யூதா, வசனங்கள் 23-26) அவர் இரக்கங் கொண்டு அவர்களுடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார். அவர் பன்னிரண்டு கோத்திரமாகிய இஸ்ர–யேல் ஜனத்தாரையும் தங்கள் பூமிக்குரிய சுதந்தரத்துக்கு மீண்டும் கொண்டு வந்து, ஒவ்வொருவரையும் அவனவன் தன் தன் மீறுதல்களுக்கு மட்டும் பொறுப்பாளியாகும்படி செய்வார். (வசனங்கள் 27-30). அவர் அவர்களுடன் ஒரு புது உடன்படிக்கையை உண்டுபண்ணுவார். அதாவது அவர் தம்முடைய பிரமாணத்தை அவர்களுடைய இருதயங்களில் எழுதி, அவர்கள் எல்லாரும் அவரை அறியும்படி செய்வார்; அவர் அவர்களுடைய பாவங் களையும் மன்னிப்பார். (வசனங்கள் 31-34). இஸ்ரயேலர் என்நாளுமே தேவனுடைய ஜனங்களாக நிலைத் திருப்பார்கள்; அத்துடன் எருசலேம் பரிசுத்த நகரமாக திரும்பக் கட்டப்படும். அதன்பின் அது என்றென்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை, இடிக்கப்படுவதுமில்லை. (வசனங்கள் 35-40).

மேலே சொல்லப்பட்டவைகளிலிருந்து, யாக்கோபின் உபத்திரவ காலம் தீர்க்கதரிசனமாக சுவிசேஷ யுகத்தின் முடிவுக்கு பொருந்துகிறதை நாம் காண்கிறோம். எரே. 30-ம் அதிகாரத்தின் முதல் வசனம் 30, மற்றும் 31-ம் அதிகாரங்களின் முழு தீர்க்கதரி–சனத்தின் தலைப்பை உள்ளடக்கியிருக்கிறது, 2 மற்றும் 3-ம் வசனங்கள் முன்னுரையாக இருந்து, பின்வரும் தீர்க்கதரிசன பாடப்பகுதியைக் கொடுக்கிறது. இந்த தீர்க்கதரிசனம் வேத வாக்கியங்களில் எழுதப்பட வேண்டியிருந்தது. (சுவிசேஷ யுகத்தின்போது) மேலும் இஸ்ரயேல் இரண்டாம் முறை திருப்பிக் கொண்டுவருதல், "**உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும்**" (எரே. 30:11), இரண்டாவதாக ஒரு நாடுகடத்தலுக்குப்பிறகு, தேவன் அவர்களுடைய மூதாதையர்களுக்குக் கொடுத்ததும், அவர்கள் மீண்டும் பெற்றுக்கொள்வதுமான பரிசுத்த பூமிக்கு வர உற்சாகப்படுத்துவதற்கு இது படித்தறிந்து கொள்ளப்படவும், தியானிக்கப்படவும் கூடியதாயிருந்தது.

வசனம் 4-11 ஜாதிகள் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு நடத்தி, அது இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் விடுதலையை நிறைவேற்றுகிறது. தேவன் இங்கே தீர்க்கதரிசனமாக உரைப்பது என்ன–வெனில், இஸ்ரயேல் யாக்கோபின் உபத்திரவ காலத் திற்குள்ளாக வருகிறபடியால், அவர்கள் சமாதானம், பாதுகாவலுக்குப் பதிலாக அச்சத்தையே அனுபவிப் பார்கள்; அவர்கள் அஞ்சி நடுங்கும் வேதனை கொண்ட கொடுமையான பாடுகளின் கீழ் அச்சம் கலந்த பீதியால் மேற்கொள்ளப்படுவதால் ஒருவன் அவர்களைக் குறித்து பிள்ளை பெறும் ஸ்திரீகளின் பிரசவ வேதனை அடைபவர்களாக கற்பனை செய்யக்கூடும். எரே. 30:7-ல் அவர்களுடைய மிகுதியான அச்சத்திற்கான காரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது மகா நியாயத்தீர்ப்பின் நாளாயிருக்கிறது. (2 பேது. 3:7,8). சுவிசேஷ யுகத்தின் அறுவடையுடனும், "**யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலத்துடனும்**" அது அடியெடுத்து வைக்கிறது. (தானி. 12:1; மத். 24:21). "**அந்த நாள்** (இந்த நாளல்ல) **மகா பெரியது.**" இந்த வார்த்தைகள் அப்போதிருந்த எதிர்காலத்தில் வரவிருக்கும் ஓர் நேரத்தை சுட்டிக் காட்டுகிறது; அவர்கள் யோவே. 2:11-ல் இருப்பதைப் போன்று இருக்கிறார்கள். (யோவேல் தீர்க்கதரிசனம் எரேமியாவின் நாளுக்கு நெடுநாள் முன்பு எழுதப்பட்டதாகும்); அவை மகா உபத்திரவ காலத்தை மறைமுகமாக சுட்டிக்காட்டுபவையாயிருக்கின்றன: "**கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்.**"

எரேமியாவும் தீர்க்கதரிசனமாக உரைத்த, "**அதைப் போலொத்த நாளில்லை**" என்பதும் கூட யோவே. 2:2-ல் சொல்லப்பட்டதற்கு ஒத்திருக்கிறது. "**அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை, இனித் தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவது மில்லை.**" இந்த நாள் யாக்கோபுக்கும்கூட அதாவது இஸ்ரயேலரெல்லாருக்கும் மகா இடுக்கமான காலம். (ஏசா. 22:4,5; செப். 1:14-18). "**அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்: ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.**" எரே. 30:7.

## யாக்கோபினுடைய இக்கட்டின் முதல் கட்டம்

1881-ல் யாக்கோபினுடைய உபத்திரவத்தின் முதல் கட்டம் துவங்கியது, அச்சமயம் யூத ஜனங்களில் கொஞ்சபேர் தவிர பல்வேறான ஜனங்கள் புறஜாதி தேசங்களில் நாடுகடத்தப்பட்டு இருந்தார்கள். யாக்கோபு மரணத்திலிருந்து அவர்கள் மேசியாவை கி.பி. 33-ம் ஆண்டின் வசந்தகாலத்தில் புறக்கணித்தது வரை 1845 வருடங்களாக தேவ தயவை அவர்கள் அனுபவித்து விட்டனர். அதன்பின்பு அவர்களுக்கு "இரண்டத்தனை" அல்லது மீண்டுமாக தயை இழந்த காலப்பகுதி அதுவும் 1845 வருடங்களுக்கு ஏற்பட்டது, (சகரி. 9:9,12; மத். 21:4,5; 23:38,39). அப்பகுதி 1878-ம் வருஷம் வசந்த காலத்தில் முடிவடைந்தது. அதுமுதற்கொண்டு, தேவ தயவு இஸ்ரயேலுக்குத் திரும்பத் தொடங்கியது. (ஏசா. 40:1,2). 1878-ல் டெலிட்ஷ்ச் என்பவர் எபிரெய மொழியில் புதிய ஏற்பாட்டை பொதுவாக புழக்கத்தில் விடத் தொடங்கினார். இங்கிலாந்தின் அப்போதைய பிரதம மந்திரியாக இருந்த டிஸ்ரேலி என்கிற ஒரு யூதன் தேசிய பெர்லின் காங்கிரஸின் செல்வாக்கைப் பயன்படுத்தி, பாலஸ்தீனத்தை உள்ளடக்கிய துருக்கியின் ஆசிய மாகாணங்கள் மீது இங்கிலாந்து பொதுவானதொரு பாதுகாத்தலுடன் கூடிய ஆட்சிக் கட்டுப்பாட்டை கொண்டு வர தீவிரமாக முயற்சி செய்தார்; துருக்கி அரசும் அயல்நாட்டவர் சம்பந்தமான சட்டங்களை திருத்தியது. இதுவே பாலஸ்தீனத்தில் அப்போது வசித்த யூதர்களின் நிலையை மேம்படுத்தியது, அதைப் போலவே ஒரு பகுதியளவு வாசலைத் திறந்து அங்கே மற்றவர்களும் நிலங்களை வாங்கும் சிலாக்கியத்துடன் இருக்க வைத்தது. 1878-ல் இஸ்ரயேலுக்கு, "நியமிக்கப்பட்ட காலம்" நிறைவேறித் தீர்ந்த பிறகு (ஏசா. 40:1,2; மார்ஜின் பார்க்கவும்) அது "***தன் சகல பாவங்களினிமித்தமும் இரட்டிப்பாய்***" அடைந்து தீர்ந்த பின்பு, தேவன் தம்முடைய ஜனங்களை மதசம்பந்தமான ரீதியிலும், உலகப் பிரகாரமான காரியங்களிலும் ஆற்றித் தேற்றக் காரணமாக விளங்கினார்.

ஆனால் அவர்களைத் தங்கள் சுய தேசத்துக்கு மீண்டும் கொண்டு வந்து, தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படுவதற்கு தயார்படுத்த, இதைவிடவும் மேலான சில காரியங்கள் அவசியப்பட்டன. (மத். 6:10; எண். 14:21; ஏசா. 2:2-4; 11:9; தானி. 2:35,44; வெளி. 5:10). தேவன் இதனை யாக்கோபின் இக்கட்டின் திரும்பக் கூட்டிச் சேர்த்தல் எனும் முதலாம் கட்டத்தில் "**மீன்பிடிக்கிற-வர்கள்**" மற்றும் "**வேட்டைக்காரர்கள்**" மூலமாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறார். (எரே. 16:14-16). "மீன்பிடிக்கிறவர்கள்" என்பவர்கள் யூதர்களை அவர்களுடைய சுயதேசத்துக்கு கவர்ந்திழுக்க சீயோனிசம் முதலான கவர்ச்சிகரமான தூண்டில் இரையைப் பயன்படுத்துகிறவர்கள் ஆவர். இந்த வேலை டாக்டர். தியோடர் ஹெர்ஸிலின் முன்னோடியான லியோ பின்ஸ்கர் என்பவரால் 1882-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. உதவும் அரசியல் மேதைகள், யூத கிளர்ச்சியாளர்கள் மற்றும் அநேக கிறிஸ்தவர்களும்கூட யூதர்கள் தங்களுடைய சுயதேசத்துக்கு திரும்பிச் செல்வதற்கு அதிகமான உதவியும், அவர்களை உற்சாகப்படுத்த அதிகமான காரியங்களையும் செய்ய நாடித் தேடினார்கள். "வேட்டைக்காரர்கள்" என்பவர்கள் அழிப்பதற்காக பின்தொடர்ந்து செல்பவர்கள் ஆவர். இவர்களும்கூட பல்லாயிரக்கணக்கான யூதர்கள் தங்கள் சுயதேசத்திற்குத் திரும்புவதற்கு காரணமாயிருந்தார்கள். 1878-ல் கொடூரமான பாடுகள் ருமேனியாவிலும் கலீஷியாவிலும் முக்கியமாக ரஷ்யாவிலும் எழுந்தது, அதுவே 1881-ல் "மே சட்டங்கள்" (May Laws) இயற்றப்பட்டு, அதன் விளைவாக ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலும் மிக கொடுமை யான துன்பங்கள் தொடர்ந்தன. அநேக பகுதிகளில் இனப்படுகொலைகள் தாராளமாக நடந்தேறியதுடன் சொற்களால் வர்ணிக்க முடியாத அளவிற்கு மோசமான குற்றச் செயல்கள் யூதர்களுக்கு எதிராக செய்யப்பட்டன, முக்கியமாக உலக மகா யுத்தத்தின் இரண்டு கட்டங் களிலும் அவை செய்யப்பட்டன. "வேட்டையாடுதல்" சில நாடுகளில் இன்னும் தொடர்ந்து வருகிறது, மிகப் பெரிய அளவில் இல்லையெனினும் வெளித்தோற்றத்தின்படி குறைவான துன்புறுத்தலுடன் நடைபெற்று வருகிறது. தேவன் இந்த "யாக்கோபின் இக்கட்டு காலத்தின்" மூலமாக தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றி வருகிறார்.

## மீண்டும் கூட்டிச் சேர்க்கப்பட்டுள்ள இஸ்ரயேலில் அனைத்து 12 கோத்திரங்களும் அடங்கும்

இஸ்ரயேல் ஜனங்களை திரும்ப கூட்டிச் சேர்க்க வாக்களித்ததில், தேவன் அந்த பத்து கோத்திரங்களை (சில சமயங்களில் இஸ்ரயேல், எப்ராயீம் முதலிய பெயர்களில் அழைக்கப்படுகின்றன) மட்டும் இரண்டு கோத்திரங்களிலிருந்து (பொதுவாக யூதா என்று அழைக்கப்படுகிறது) - வேறுபடுத்தி குறிப்பிட்டுச் சொல்லவில்லை, ஆனால் மாறாக எல்லா பன்னிரண்டு கோத்திரங்களுமே அதில்

குறித்து காட்டப்படுகிறது. ஏனெனில் அந்த எல்லா பன்னிரெண்டு கோத்திரங்களுமே "**காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டார்**" என்று குறித்துக் காட்டப்பட்டனர், அவ்வீடு கி.பி. 33-ல் பாழாக்கப்பட்டது. அந்த பன்னிரெண்டு கோத்திரத்தார் எல்லோரும் ஏசா. 11:11,12-ல் குறித்து காட்டப்பட்டு, அங்கே பத்து கோத்திரங்கள் இஸ்ரயேல் என்றும் இரண்டு கோத்திரங் கள் யூதா என்றும் இரண்டுமே குறிப்பிடப்படுகிறது: "**அக்காலத்திலே** (எரே. 30:7-ல் குறிப்பிடப்பட்டபடி - 'யாக்கோபின் இக்கட்டு காலம்' - என்கிற 'அதே நாளில்') **கர்த்தர் தம்முடைய கரத்தை நீட்டி இரண்டாம் விசை** (பாபிலோனிய சிறையிருப்பின் முடிவில் அவர் முதல் தடவை செய்ததுபோல) **தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ள ..... ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரயேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்.**" (இவைகள் அனைத்தும் 1878-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடந்து வருகிறது. அதற்கு முன்பு இது போல ஒருக்காலும் நடை பெறவில்லை, ஏனெனில் சுவிசேஷ யுகத்தில் அவர்கள் பிரிந்து போவதற்கு முன்பு, அந்த பன்னிரெண்டு கோத்திரங்களும், பூமியின் நான்கு திசைகளிலுமாக ஒருபோதும் சிதறடிக்கப்படவில்லை.)

எசே. 36:22,24-ம் கூட தேவன் இஸ்ரயேல் என்னும் நாமத்தின்கீழ் எல்லா பன்னிரெண்டு கோத்திரங்-களையும் குறித்து சொல்லும் போது, அவர், "**ஆதலால் நீ இஸ்ரயேல் வம்சத்தாரை நோக்கி: இஸ்ரயேல் வம்சத்தாரே, ... நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து** (தேசங்கள்) **அழைத்து, உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்திற்கு உங்களைக் கொண்டு வருவேன்.**" இந்த திரும்ப கூட்டிச் சேர்த்தல், தேவன் அவர்களைச் சிதறடித்த புறஜாதியாரின் தேசங்களின் முழுமையான முடிவுக்கு சற்று முந்தியிருக்க வேண்டும். (எரே. 30:10,11; 46:27,28), ஒவ்வொரு திசையிலிருந்தும், அவர்களைக் கொண்டு வந்து "**அவர்களை இஸ்ரயேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்,.... அவர்களும், ... அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள்:**" (எசே.37:21, 22, 25).




## யாக்கோபினுடைய இக்கட்டின் இரண்டாம் கட்டம்

ஆகையால் "அந்த நாளில்" யாக்கோபின் இக்கட்டின் முதலாம் கட்டத்தில் தேவன் ஐரோப்பாவின் நுகத்தை இஸ்ரயேலின் கழுத்தின் மேல் இராதபடிக்கு படிப்படியாக உடைத்தார். (எரே. 30:8). அத்துடன் ஐரோப்பாவுடன் அவர்களைக் கட்டிவைத்துள்ள கட்டு களும், கட்டுப்பாடுகளும், கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்பட்டு அறுக்கப்பட்டுவிட்டன. ஆனால் அங்கே யாக்கோபின் இக்கட்டின் இரண்டாவது கட்டமும்கூட இருக்கிறது. இது அர்மகெதோன் யுத்தம் என்னும் வேதபாட புத்தகத்தில் (S. Vol. 4) பக்கங்கள் 552 மற்றும் 554-ல் "இறுதி நொறுக்குதல்" என்பதாகவும், "இன்னும் கூட அதிக கடுமையான வேதனையின் அலை ஒன்று... மகா நாளின் யுத்தத்தின் இறுதியான போராட்டம்" இருக்கிறது என்றும் பக். 552-561-ல் இது விவரிக்கப்பட்டுள்ளது.

யாக்கோபின் இக்கட்டுக்காலத்தின் இரண்டாம் கட்டம் உலகத்தின் அராஜக காலத்தின் முடிவில் வருகிறது. இது எசேக்கியேல் 38, 39-ம் அதிகாரங்களில் விளக்கப் படுகிறது. மீண்டும் கூட்டிச் சேர்க்கப்பட்ட இஸ்ரயேலர் களின் அதிகமாக வளர்ந்து வருகிற சம்பத்தும், வளமையும் ஐரோப்பிய ஆசிய மற்றும் ஆப்பிரிக்க தேசங்களின் பொருளாசையைத் தூண்டுவதாய் இருந்து வருகிறது. இது அவர்களுடைய மீதியாயிருக்கும் அராஜகத்தில் மிகுதியாக வலியுறுத்தப்படும். இவை இஸ்ரயேலின் மீது கடைசி நிலையாகிய யாக்கோபின் இக்கட்டின் இரண்டாம் கட்டத்தை, இஸ்ரயேலின் சாபத்தின் பாத்திரத்தில் மீதமிருந்த கடைசியான மிச்ச வண்டல்களைக் கொண்டுவரும். கோகு, மாகோகு என்பது தேவனுடைய ஜனங்களின் விரோதிகளான தேசங்களின் தலைவர்களையும் அவர்களைப் பின்பற்றுபவர்களையும் குறித்துக் காட்டுகிறது. கூடுதலாக வெளி. 20:8 ("ஜாதிகளாகிய... கோகையும் மாகோகையும்") வெளிப்-படையாக இது ஆயிர வருட யுகத்தின் முடிவில் சொற்ப காலத்தில் நடக்கும் நிகழ்வாக இருக்கப்போவதாகக் காட்டுகிறது; ஆகையால் பகுத்தறிவுக்கிணங்க இந்த ஒற்றுமையைப் பார்க்கும்போது தேவனுடைய மாம்ச இஸ்ரயேலரின் விரோதிகளே சுவிசேஷ யுகத்தின் முடிவிலும் வருகிறார்கள் என்பது மெய்யாகிறது. இந்த அராஜக கொள்ளைக்காரர்கள் எசே. 38, 39-அதிகாரங் களிலும்; சகரி. 12:1-9 மற்றும் 14:1-3-ம் விளக்கப்-பட்டுள்ளபடி இஸ்ரயேலை யாக்கோபின் இக்கட்டின் இறுதி கட்டமாகிய இரண்டாவது கட்டத்தில் மிகவும் கடுமையாக துன்பப்படுத்துவார்கள்.

இஸ்ரயேலருடைய அவிசுவாசத்தின் காரணமாக ஏற்படும் இறுதியான சிட்சையும், அவர்களுடைய விரோதிகளின் அற்புதமான தோல்வியும் அவர்களுடைய கண்களை இறுதியாகத் திறக்கும்; "**அப்பொழுது அவர்கள் அவரை** (இயேசு) **உருவக்குத்தினதினிமித்தம் என்னை** (யேகோவா) **நோக்கிப்பார்ப்பார்கள்: ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல அவருக்காகப் புலம்பி,**

***ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல அவருக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்***" (சகரி. 12:10; அமெரிக்க சங்கத்தின் யூத வெளியீட்டின் மொழிபெயர்ப்பு). பின்பு ஒரு தேசமாக மாற்றப்பட்ட இஸ்ரயேல் மகா பெரிய இக்கட்டாகிய உபத்திரவத்தில் ("மேகங்கள்" - வெளி. 1:7) தங்களை மீட்டுக் கொள்வதற்காக, தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபடியே தங்களிடத்தில் வந்திருக்கும் மேசியாவை அறிந்து உணர்ந்து கொள்வார்கள். உதாரணமாக எசே. 39:22-29; சகரி. 12; 14:1-3; எரே. 30:7,8 ஆகிய வசனங்களில் மேசியா பற்றிய தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு அவர்கள் "***தங்கள் தேவனாகிய கர்த்தரையும், நான் தங்களுக்கு எழுப்பப் போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே*** (பிரியமானவர், அதாவது மேசியா - எசே. 34:23,24; 37:24,25; ஓசி. 3:5) **சேவிப்பார்கள்.**" (எரே. 30 : 9). "**இந்தப் பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள், மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும்: நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக் கிறது.**" (ரோம. 11 : 26, 27). இது அவர்களுடைய நித்திய ஜீவனுக்கான சர்வலோக இரட்சிப்பு என்று அர்த்தமல்ல, ஆனால் இந்த இணைப்பு காட்டுகிறது போல, இஸ்ரயேலர்கள் எல்லாரும் தங்கள் சுவிசேஷ யுக "**ஒரு பகுதி குருட்டுத் தன்மையிலிருந்தும்,** (அல்லது கடினத் திலிருந்தும்)" அவர்களுடைய நியாயப்பிரமாணத்திற்கும் கிறிஸ்துவுக்கும் எதிரான பாவங்களுக்கான தண்டனையி-லிருந்தும், அதைப் போலவே ஆதாமின் சாபத்திலிருந்தும் யூத மத பாவங்களிலிருந்தும் விடுதலையாக்கப்-படுவதையும் அர்த்தப்படுத்துகிறது.

பூமியின்மீது கர்த்தருடைய நீதியான அரசாட்சி (ஏசா. 26:9; 28:17) முதலாவது இஸ்ரயேலில் திரும்பி கூட்டிச் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் மனமாற்றமடைந்த-வர்களுமான யூதர்கள் மத்தியில் ஸ்தாபிக்கப்படும். (சகரி. 12:7,8; எரே. 23:5,6; 33:14-16; எசே. 36:24-38; E.Vol.17ஆயிர வருட யுகம்; தமிழ் பக்கங்கள் 372-385; Eng. பக்கங்கள் 333-345 பார்க்கவும்). அவர்கள் உயிர்த்தெழுந்து வரும் தங்களுடைய ஆதிப் பிதாக்களை-யும் மற்றும் மீதியாயிருக்கிற பாத்திரவான்களையும் சந்தோஷத்தோடு வரவேற்று அவர்களுடைய பயன்தரும் ஆளுகையின் மூலமாக மிகுதியாக ஆசீர்வதிக்கப்-படுவார்கள். (ஏசா. 1:25-27; 25:9; 32:1). அதற்கு கொஞ்சம் பின்பு, போரிட்டு களைத்துப் போன, புறஜாதியான தேசங்கள் உபத்திரவ காலத்து சாபங்களால் இல்லாமற்போவதுடன் முறிந்துபோகும். (மத். 24:21,22) அத்துடன் இஸ்ரயேல் களிகூர்ந்திருக்கும் மகத்தான ஆசீர்வாதங்கள் பற்றி அறிந்து கொண்டு, தங்களுக் காகவும் அதைப் போலொத்த ஆசீர்வாதங்களை வாஞ்சிப்பார்கள். (ஏசா. 2:3,4; சகரி. 8:20-22). ஒத்தாசை நாடி அவர்கள் செய்யும் தாழ்மையான விண்ணப்-பங்களின் பலனாக ராஜ்யமானது அதன் ஒழுங்குமுறை-களுடன் ஒவ்வொரு தேசத்திலும் ஒன்றன் பின் ஒன்றாக, அது உலகளாவிய பேரரசாக மாறும் வரைக்கும் ஸ்தாபிக்கப்பட்டு வரும். (தானி. 2:44; 7:27). மாம்ச இஸ்ரயேலர்கள் (இரண்டாம் நிலை பூமிக்குரிய ஆபிரகா-மின் வித்து) மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களின் வழிகாட்டுதலின் கீழ் (ஆபிரகாமின் பூமிக்குரிய வித்தில் பிரதானமானது - யோவே. 2:28; 2 தீமோ. 2:20) ராஜ்யத்தின் ஆவிக்குரிய நிலையுடன் - சிறுமந்தை மற்றும் திரள்கூட்டத்தாருடன் (லூக். 12:32; சங். 45:14,15; வெளி. 7) - சேர்ந்து, அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்து புறஜாதியார் அடங்கிய உலகை மனமாற்றமடையச் செய்து, அவர்களை ஆசீர்வதிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வார்கள். (ஆதி. 22:17,18; 28:14; ஏசா. 19:24; எசே. 16:60,61; சங். 107:22). இது இஸ்ரயேலின் புது உடன்படிக்கையின் கீழாக, எரேமியா 31-ல் விளக்கப்பட்டுள்ளபடி, "**பூமியிலுள்ள சகல ஜாதிகளின்**" ஆசீர்வாதத்துக்காக நிறைவேற்றப்படும்.

மொத்த பூமியும், விசேஷமாக இஸ்ரயேலும் இப்பொழுது மிகவும் அருகில் சமீபித்திருக்கிறதான மகத்தான ஆசீர்வாதங்களில் களிகூருவார்கள். வாக்குத்தத்தமானது நிச்சயமானதாய் இருக்கிறது. தேவன் தாமே வாக்களித்திருக்கிறார். மேலும், கிருபையாக அவர்தாமே தமது ஆணையினால் நமக்கு "**நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு**" (எபி. 6:16-18) தம்முடைய வாக்குத்தத்தத்தை ஸ்திரப்படுத்தியிருக்கிறார். சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாளின் யுத்தம், உலகமனைத்தையும் புதிய நாளுக்காகவும், அதன் மகா பெரிய திரும்பக் கொடுத்தல் வேலைக்காகவும் ஆயத்தப்படுத்தி வருகிறது. (அப். 3:19-23); யாக்கோபின் இக்கட்டு காலமும் யாக்கோபின் வித்தை, தங்களுடைய பங்குக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறது.

விழித்துக் கொள்ளும் மணி நேரம் மேகங்களும், காரிருளுமான ஒரு நேரமாக இருக்கும் என்றாலும், (யோவே. 2:1-3) அழிவின் வேலையானது "சொற்ப கால வேலையாயிருக்கும்" என்ற அவருடைய ஆசீர்வாதமான நிச்சயத்திற்காக தேவனுக்கு நன்றி. (மத். 24:22); விரைவிலேயே அதற்குப் பின்பு, நீதியின் மகிமையான சூரியன் பிரகாசிக்கத் தொடங்கும். (மல். 4:1,2) பூமியானது (சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட தற்காலத்திய பழைய சமூக அமைப்பு), "**ஒரு குடிலைப் போலப் பெயர்த்துப் போடப்படும், ...அது விழுந்துபோம், இனி எழுந்திராது.**" (ஏசா. 24:19,20). நீதி வாசமாயிருக்கும் புதிய எருசலே-மாகிய புதிய வானமும், புதிய பூமியுமாகிய, தேவனுடைய புதிய கட்டிடத்திற்கு பாதையை செவ்வைபண்ணும் நோக்கத்திற்காகவே இந்த மகா உபத்திரவ காலம் இருக்கிறது. (2 பேது. 3:13; ஏசா. 65:17; வெளி. 21).

"**இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்**" (லூக். 21:31).

## இஸ்ரயேல் மற்றும் யாக்கோபின் இக்கட்டு

இஸ்ரயேலையும், பாலஸ்தீனாவையும் பற்றி முதலில் இங்கு கலந்தாலோசிக்கலாம். ஆமோஸ் தீர்க்கதரிசியின் செய்தியையும் நாம் கருத்தில் கொள்வோம். "**அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய் போனதை சீர்ப்படுத்தி, பூர்வ நாட்களில் இருந்தது போல அதை ஸ்தாபிப்பேன் என்று இதை செய்கிற கர்த்தர் சொல்லுகிறார். என் ஜனமாகிய இஸ்ரயேலின் சிறையிருப்பை திருப்புவேன். அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி அவைகளில் குடியிருந்து திராட்சைத் தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய கனிகளை புசிப்பார்கள்.**" [வசனம் 15-ல் உள்ள வார்த்தைகளை கவனியுங்கள்.] "**அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன். நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்**" (ஆமோஸ் 9:12,14,15) .

எந்த தேசத்தை தேவன் ஆபிரகாமிற்கும் அவன் வித்திற்கும் வாக்குத்தத்தம் செய்து, அதன் பின்னர் ஈசாக்கிற்கும், யாக்கோபிற்கும் உறுதிப்படுத்தினாரோ அந்த தேசமே இஸ்ரயேல் என்ற ஒரு தேசமாக பிறந்தது. இப்போது நீங்கள் அறிந்துள்ளபடி இஸ்ரயேலர் தேவனுக்கு பிரியமான காரியங்களை செய்துள்ளனர். ஆனாலும் சில சமயங்களில் அவர்கள் அவைகளை செய்யவில்லை. தங்களுடைய அக்கிரமங்களுக்காக அவர்கள் தேவனிடத்திலிருந்து சிட்சைகளைப் பெற்ற காலங்களும் உள்ளன. இதைக்குறித்து ஆமோ. 3:2-ல் "**பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துக் கொண்டேன். ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களை தண்டிப்பேன்**" என்று நாம் வாசிக்கின்றோம். இது புதுமையாக காணப்படுகிறதில்லையா? ஏனெனில் ஒருபுறம் தேவன் தமது ஜனங்களான இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதாகவும், மறுபுறம் அவர்கள் தவறு செய்யும் போது தண்டிப்பேன் என்றும் சொல்லுகின்றார்.

இந்த பிரகாரமாகவே தேவனுடைய தயவு அவருடைய ஜனங்களுக்கு காட்டப்பட்டது. இதைப் போலவே தான் நாமும் அவர் நியமித்திருக்கும் சத்தியம் மற்றும் நீதியிலிருந்து வழிவிலகிப் போகும்போது அவர் சொன்னது போல அவருடைய தயவும் மாறுபடும். ஆக இஸ்ரயேலரை தேவன் ஆசீர்வதித்தார். அவர் தாம் நியமித்த தூதரை அவர்களிடத்தில் அனுப்பினார். அந்த நியமிக்கப்பட்ட தூதரே அவர்களுடைய மேசியா ஆவார். மேசியா அவர்களிடத்தில் சொல்லிய சுவிசேஷ செய்தியை அவர்கள் நிராகரித்தனர். நமது ஆண்டவரை சிலுவையில் அறையும்படி வலியுறுத்தினர்.

**தீர்க்கதரிசனம்**

**இஸ்ரயேல் தொடர்ந்து சிட்சிக்கப்பட்டிருக்கிறது, சிட்சிக்கப்படும்**

"பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களை தண்டிப்பேன்."

ஆமோஸ் 3:2

**இஸ்ரயேலருடைய துக்கம் சந்தோஷமாக மாறும்**

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப் பண்ணுவேன்; அதை அவர்கள் சுநத்தரித்துக்கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

எரேமியா 30:3

நமதாண்டவரை சிலுவையிலறைய வேண்டும் என்று இஸ்ரயேலர் அமளி செய்த போது பிலாத்து அவர்களிடமாக சொன்னதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? "**அவன் தண்ணீரை அள்ளி ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்**" என்றான் (மத் 27:24). உண்மையில் அவன், தெய்வீக தீர்ப்பின் தண்டனையின் பாகத்திலிருந்து விடுவிக்கப்படவில்லை என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அங்கு கூடியிருந்த யூதர்களும் என்ன சொன்னார்கள்? "**இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக**" என்றார்கள். (வசனம் 25).

பூமியின் குடிகளில் எந்த ஜனங்களும் அடையாத அளவிலான துன்பங்களை யூத ஜாதியினர் அடைந்தனர். ஏன் இப்படி நடந்தது என்றும், ஏன் இவ்வளவு அதிக காலம் என்றும், ஏன் ஒரு கால அளவு வரை தண்டிக்கப்பட்டனர்? என்றும் ஒருவர் கேட்கலாம். இந்த காரணத்தினால்தான் என்பது வெளிப்படையாக உள்ளது. தங்களுக்கான தேவனுடைய தயவிற்கு எதிராக இவர்கள் பாவம் செய்த காரியங்களால் இவை விளைந்தன. ஆகையினாலே நீதிக்கும் கிருபைக்கும் விரோதமாக கலகம் செய்ததினால் குறிப்பிட்ட காலம் தேவன் இவர்களை தண்டித்தார்.

நமதாண்டவரின் சிலுவை மரணம், அந்த சமயத்தில் யூதர்கள் அவருடைய மரணத்திற்காக செய்த கலகம் மற்றும் தங்களுடைய மேசியாவையே மையமாக வைத்து-சொல்லப்பட்ட சுவிஷேச செய்தியை நிராகரித்தலுமான இவை அனைத்துமே இவர்களுக்கு மிகுதியான வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இவர்கள் மேசியாவையும், அவர் பிரசங்கித்த செய்தியையும் ஏற்றுக் கொண்டிருந்தார்களேயானால், 1,44,000 பேரை கொண்ட மணவாட்டி சபை அங்கத்தினர்கள் எவ்வித சந்தேகமும் இல்லாமல் அந்த ஜனத்திலிருந்தே எடுக்கப்பட்டிருப்பார்கள். (வெளி. 7:4). எவ்விதத்திலும் ஒரு புறஜாதியாரும் அதில் இருந்திருக்கவே முடியாது. அவர்கள் அவரை நிராகரித்தபடியினால் தேவன் அவர்களைத் தள்ளினார். கி.பி. 69 மற்றும் 70 – ல் ரோம இராணுவம் உள்ளே புகுந்து பாலஸ்தீனாவை வீழ்த்தி பட்டயத்தினாலும், அக்கினியினாலும், பஞ்சத்தினாலும்

எருசலேம் நகரத்தை பிடித்தபொழுது அவர்களுடைய தண்டனையின் காலம் ஆரம்பமானது. அந்த சமயத்திலிருந்துதான் இஸ்ரயேலர் உலகத்திலுள்ள பல்வேறு தேசங்களில் ஒவ்வொரு நாட்டிலும் சிதறிப் போயினர். கிறிஸ்துவின் நாமத்தை சொந்தம் கொண்டாடும் கிறிஸ்தவ நாடுகள் என்றழைக்கப்படும் நாடுகளிலுள்ளவர்களால் யூதர்கள் துன்புறுத்தப்பட்டனர். சிலுவைப் போரில் சிலுவைக் கொடியின் கீழ் இராணுவம் பாலஸ்தீனாவிற்கு சென்ற போது மாபெரும் அந்திக்கிறிஸ்துவின் அமைப்பின் மூலமாகவும் இவர்கள் துன்புறுத்தப்பட்டனர். போப் இன்னஸண்ட் III-ன் சிந்தனையில் பிறந்த புலனாய்வு மற்றும் விசாரணையின் மூலம் ஐரோப்பா, மெக்ஸிகோ, மற்றும் தென் அமெரிக்கா போன்ற நாடுகள் முழுவதிலும் இருந்த மிகுந்த உண்மையான கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல் யூதர்களும்கூட துன்புறுத்தப்பட்டனர்.

இஸ்ரயேலரின் விலகிச் செல்லும் குருட்டாட்டத்தைப் பற்றி வேதாகமம் குறிப்பிடுவதை சற்று நாம் பார்க்கலாம். ரோம. 11:25-ல் நமக்கு இஸ்ரயேலின் இரட்டிப்பைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. முன்பு இஸ்ரயேலின் அனுபவங்கள் இரண்டு வித்தியாசமான காலப்பகுதிகளில் இரண்டு வித்தியாசமான வழிமுறைகளில் ஏற்பட்டன. 1845 வருடங்கள் தேவன் இவர்களுக்கு அனுகூலமாக கொடுத்த முதல் காலப்பகுதியானது கி.மு. 1813-ல் யாக்கோபின் மரணத்திலிருந்து ஆரம்பித்து கி.பி. 33 - ல் முடிவடைந்தது; கி.மு கடந்த காலத்தில் எழுத்தாளர்கள் மற்றும் ஆக்கியோன்கள் B.C.-ஐ பயன்படுத்தினர். அதாவது B.C. என்பது கிறிஸ்து பிறப்புக்கு முன் (B.C. 1813) என்பதாகும். தற்போது BCE என்ற எழுத்துக்களை பயன்படுத்துகின்றனர். B.C.E. என்றால் Before Common Era அதாவது 'பொதுவான சகாப்தத்திற்கு முன்பு' என்று பொருள்படுகிறது. முஸ்லீம்களையோ மற்றும் மற்ற அனைத்து புற சமயத்தவர்களையோ அவர்கள் புண்படுத்த விரும்பவில்லை என்று கிறிஸ்தவ மார்க்க சம்பந்தமான குறிப்புகளை நீக்கிப் போட வேண்டுமென்றே நாடினர். ஆகையினாலே அவர்கள் இயேசுவானவர் இந்த பூமிக்கு வந்த போது ஏற்பட்ட காலப் பிரிவை அதாவது கி.மு., கி.பி. என்பதை, அங்கீகரிக்கவும் கூட விரும்புகிறதில்லை. பல நூற்றாண்டுகளாக நமது நாள்காட்டிகளில் B.C என்ற இந்த பதம் இருப்பதற்கு காரணமான அவருடைய ஊழியம், அவருடைய பணிகள், அவருடைய சிலுவை மரணம் ஆகியவைகளையும் அங்கீகரிக்க விரும்புகிறதில்லை.

யூதருடைய சரித்திரத்தின் இரண்டாவது காலப்பகுதி கி.பி. 33 முதல் கி.பி. 1878 வரையிலாக பிரிக்கப்பட்டது. இந்த இடைப்பட்ட வருஷங்களில் யூத ஜனங்கள் தங்களுடைய பாவங்களுக்காக தேவனிடமிருந்து தங்களுடைய தண்டனைகளின் பகுதியாக, அதிகப்படியான துன்பங்களை சகித்தனர். 1878 - ல் காரியங்கள் நலமானதாக கொஞ்சம் கொஞ்சமாக மாறுவதற்கு ஆரம்பமானது. தீர்க்கதரிசனங்களிலும், பல்வேறு வழிகளிலும் இஸ்ரயேல் தேவனிடமாக தயவைப் பெற ஆரம்பித்தது. தேவன் தமது தயவை அவர்களுக்கு அளித்தார். அவர்களுக்கு முதலில் அதிகமாக அல்ல கொஞ்சமாகவே தயவை அளித்தார். ஏசா. 40:2 - ல் "**எருசலேமுடன் பட்சமாய் பேசி அதன் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில்** (தேவனுடைய கையில்) '**இரட்டிப்பாய்**' **அடைந்து தீர்ந்தது என்றும் அதற்கு கூறுங்கள்**" என்று நாம் வாசிக்கின்றோம். "இரட்டிப்பு" - என்பது இரண்டு சமமான காலப் பகுதி என்று அர்த்தப்படுத்தப்படும். இதில் முதல் பகுதி யூதயுகத்தில் 1845 வருடங்களைக் கொண்ட தயவுள்ள காலம், இரண்டாவது பகுதி சுவிசேஷ யுகத்தில் 1845 வருடங்களை கொண்ட தண்டனைகளும், சிட்சைகளும் கொண்ட காலமாகும். (ஆமோ. 3:2).

இப்போது நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இஸ்ரயேலரின் தலைமுறையினர்களை கவனத்தில் கொள்ள வேண்டும். தேவ தயவு இவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கல்லறைக்கு சென்றவர்களுக்கும் கூட இது நீட்டிக்கப்பட்டுள்ளது எசேக் 37:12-14 "**கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார். இதோ என் ஜனங்களே நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படவும் உங்களை இஸ்ரயேல் தேசத்திற்கு வரப்பண்ணுவேன்.**" ஆயிர வருட யுகத்தில் ஜீவிக்கத்தக்க தாக மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்த விவரம் என்று நாம் வழக்கமாகவே புரிந்துக் கொள்ளுகிறபடி இந்த வசனம் இல்லை. இந்த வசனம் சொல்லர்த்தமான மரணநிலையிலிருந்து ஏற்படும் உயிர்த்தெழுதலை அல்ல, ஆனால் ஒரே தேசமாக இஸ்ரயேலை உயர்த்துவதற்கு கூட்டிச் சேர்க்கப்பட்டதையே இது அர்த்தப் படுத்துகின்றது. இது உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு பற்றிய எசேக்கியாவின் தரிசனத்தின்மூலம் அடையாளப்படுத்தி வர்ணிக்கப்பட்டுள்ளது. எசே.37:11-ல் "**மனுபுத்திரனே இந்த எலும்புகள் இஸ்ரயேல் வீட்டார் அனைவருமே**" என்று இதைக் குறித்துக் கூறுகின்றார். இந்த தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டுள்ள இந்தப் பெரிய பள்ளத்தாக்கின் எலும்புகள் உருவகமாக யூத ஜனங்களைக் குறித்து சித்தரிக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தைக் குறித்த இவர்களுடைய நம்பிக்கைகள் அநேக நூற்றாண்டுகளாக உலர்ந்தும் இழந்தும் போனது. ஆனால் 1878 - லிருந்து ஒரு மீளுருவாக்கம் ஏற்பட்டு 1948-ல் உலகத்திலே ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டது. எசேக்கியேல் தரிசனத்திற்கு மறுபடியும் திரும்பி பார்க்கும் போது அங்கு உடலின் பல்வேறு பாகங்களான தசைநாரும் தசைகளும் போன்றவைகள் எலும்புகளிடத்தில் கொண்டு வரப்படும் என்று பார்க்கிறோம். இந்த எலும்புகளின் மேல் மாம்சத்தை மூடப்பண்ணுவார். அதன்பிறகு இந்த ஜனங்கள் உலகத்தின் விவகாரங்களில் ஒரு தேசமாக மறுபடியும் ஜீவனையடைந்து வருவர். அது எதை அர்த்தப் படுத்துகிறது என்றால் வேதாகம தீர்க்கதரி-

சனத்தின் நிறைவேறுதலில் உலக சமுதாயத்திற்குள் இஸ்ரயேலின் முக்கியத்துவமும் ஆயிர வருட யுகத்துக்கான தேவனுடைய திட்டத்திலுள்ள அதனுடைய விஷேசமான பந்தத்தின் முக்கியத்துவத்திற்கும் மறுபடியும் கொண்டு வரப்படும் என்பதேயாகும்.

இஸ்ரயேல் நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அவர்களின் முந்தின ஆட்சிக்காலப்பகுதியின் (2009-2021) முடிவில், தேவன் ஒரு முக்கியமான நிகழ்வை அனுமதித்தார். அந்நிகழ்வு 2022 ஜூலையில் நடந்தது என்பதை நாம் நினைவிற்கொள்வது நமக்கு அவசியமாயிருக்கிறது. அந்த நிகழ்வைப்பற்றி சுருக்கமாக சொல்வதானால், இரண்டு புதிய பிரதமர்கள்: பென்னட் என்பவர் பிரதம மந்திரி இருக்கையில் அமர்ந்திருந்தார்; ஏனெனில் நெதன்யாகுவுக்கு எதிரான கூட்டணியின் மறுக்க முடியாத தலைவராகிய யெர் லெபிட் (Yair Lapid) என்பவருக்கு 17 நாடாளுமன்ற அங்கத்தினர்களும், பென்னட்டுக்கு 6 நாடாளுமன்ற அங்கத்தினர்களும் வெற்றி பெற்றிருந்தனர். அந்த கூட்டணி பெருந்தன்மையுடன் முதற் சுற்றில் பென்னட்டை பிரதம மந்திரியாக இருக்க சம்மதித்தது. இது உண்மையாகவே மிகவும் குறிப்பிடத்தக்கதும், அரசியலுக்கு அப்பாற்பட்டதும், மிகவும் மாறுபட்ட வண்ணத்தை ஏற்படுத்தியது. அதோடு கூட ஆட்சிக் கூட்டணியில் அரபுக் கட்சி இடம் பெற்றிருந்ததும் உண்மையாகவே முதல் நிகழ்வாக இருந்தது.

பிரதம மந்திரிக்குரிய இருக்கையில் நெதன்யாகு இல்லாதிருந்ததும், செய்தி சக்கரச்சுழற்சியிலும், பொது நிகழ்ச்சியிலும் அவருடைய ஆதிக்கத்தின் முடிவும், மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. புதிய கூட்டணி உருவாக்கப்பட்டு, வடிவம் பெற்று, “நெதன்யாகு அவர்கள் தவிர யார் வேண்டுமானாலும்” என்ற ஒரு மாறுபட்ட வகைப்படுத்தலாக வடிவம் பெற்றபோது, அதன் வழியில் சென்று கொண்டிருக்கையில், ஆட்சியில் விதிமுறைகள், முக்கியத்துவம் வாய்ந்த சமூக கொள்கை, மற்றும் கொந்தளிப்பான அரசியல் நிலவரத்தை ஓரளவு அமைதிப் படுத்துதல் போன்ற சில வகையான நம்பிக்கையான திருப்பம் போன்ற அதன் சொந்த குணாதிசயத்தில் முடிவுகளை எடுக்கத் தொடங்கியது. எனினும், பென்னட் கீழ் இறங்க வேண்டியதாயிருந்த போது, இந்த நிலை மாறியது.

## பாலஸ்தீன தேசத்துக்கான மாநாடு

2007-ம் ஆண்டு, டிசம்பர் 17-ம் தேதி எழுபது நாடுகள் பிரான்ஸில் உள்ள பாரீஸில் கூடியது என்று வரலாறு நமக்கு சொல்கிறது. அதன் நோக்கம் என்னவெனில், கோடிக்கணக்கான டாலர்கள் ($5.6 Billion) அல்லது அதற்கு அதிகமாக தொகைகள் திரட்டி, பாலஸ்தீன தேசம் சார்பாக, ஜனங்களை அருகாமையில் ஒன்று திரட்டி கூட்டம் கூட்டமாக தங்க வைத்து இஸ்ரயேல் தேசத்தை மிரட்டி அச்சுறுத்த வேண்டும் என்பதாக இருந்தது. மாநாட்டில் கலந்து கொண்ட அயல்நாட்டு பிரதிநிதிகள் மத்தியில் ஐக்கிய நாட்டு பொதுச் செயலர், பான்-கி-மூன் (Ban ki-moon) அமெரிக்க வெளியுறவு மந்திரி காண்டலிசா ரைஸ் (Condoleezza Rice), ரஷ்ய வெளிநாட்டு மந்திரி சர்கெய் லாரவ் (Sargaei Larrov) மற்றும் இஸ்ரேல் வெளிநாட்டு மந்திரி ஸிப்பி லிவ்னி (Tzipi Livni) ஆகியோர் இருந்தனர். பிரிட்டன் பிரதம மந்திரி பதவியிலிருந்து கீழ் இறங்கிய டோனி பிளேர் (Tony Blair) என்பவர் அந்நிகழ்ச்சியில் இணை தலைமை தாங்கினார்.

பங்கேற்றிருந்த அமைப்புகளில் ஐரோப்பிய ஆணையம், அரபு லீக், சர்வதேச நிதி அமைப்பு, உலக வங்கி மற்றும் ஐரோப்பிய மற்றும் அரேபிய நிதி அமைப்பு ஆகியவைகள் இடம் பெற்றிருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த 27 அங்கத்தினர்களும், அதே போல மத்திய கிழக்கு நாடுகளும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர்.

ராஜ்யங்களைக் கூட்டிச் சேர்ப்பது குறித்து ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை இது நமக்கு நினைவுபடுத்துகிறது. ஜனங்களே, நீங்கள் கூட்டங் கூடுங்கள், முறியடிக்கப்படுவீர்கள்: தூர தேசத்தாராகிய நீங்கள் எல்லாரும் செவி கொடுங்கள்: இடைக்கட்டிக் கொள்ளுங்கள் முறிந்தோடுவீர்கள். ஆலோசனை செய்யுங்கள்; அது அபத்தமாகும்; தேவன் எங்களோடே இருக்கிறார். (ஏசா. 8:9,10).

பாலஸ்தீனா தேசம் உண்மையிலேயே உருவாகி, அது இஸ்ரேலின் பிரதேசத்துக்குள்ளே நிரந்தரமாக வசிக்கும்படி அனுமதிக்கப்பட்டால், நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற, தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்டபடி யாக்கோபின் இக்கட்டுக் காலத்தை (எரே. 30:7) அது கொண்டு வரும்.

## பாலஸ்தீனா தேசம் 2022

பாலஸ்தீனா தேசம் பகுதியளவு தன்னாட்சி பெற்ற தனி நாடாக குறிப்பிட்ட அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது கொஸோவோ மற்றும் தைவான் நாடுகளைப் போல ஐக்கிய நாடுகள் சபையால் “உறுப்பினரல்லாத வாக்குரிமையில்லாத உற்று கவனிக்கும் தேசம்” என்று தற்போது வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. 2022 ஏப்ரல் மாதம் ஐ.நா. சபையிலுள்ள மொத்தமாகிய 193 நாடுகளில், 138 நாடுகளால் (ஒரு உற்று கவனிக்கும் நாடு) பாலஸ்தீனா தேசத்தை அங்கீகரித்துள்ளனர். புவியியல் படி, பாலஸ்தீனா தேசம் மத்திய தரைக்கடலின் மத்திய கிழக்குப் பகுதியில் அமையப் பெற்றுள்ள மேற்குக்கரை மற்றும் காஸா ஸ்டிரிப் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிரதேசங்களைக் கொண்ட தேசமாக உள்ளது. இந்த இரண்டு பிரதேசங்களும், இஸ்ரேல் என்றும் குறிப்பிட்ட அளவில் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றொரு தேசத்தால் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்ரயேல் தேசம், ஐ.நாவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு போதுமான அளவில் பெரும்பான்மையைப் (193 நாடுகளில், 162 நாடுகளின் ஆதரவைப்) பெற்றிருக்கிறது. இருப்பினும் இஸ்ரேலின் தேச உரிமை யானது சில உறுப்பினர்களால் மறுக்கப்படுகிறது.

இஸ்ரேல் பாலஸ்தீனிய பிரச்சனையில், பாலஸ்தீனா தேசமும், இஸ்ரயேல் தேசமும் இரண்டு முக்கியமான

நாடுகளாகும். அவர்களுக்கிடையே நடந்து வரும் அரசியல் மற்றும் இராணுவ பிரச்சனையில், பாலஸ்தீன யூதர்களும், இஸ்ரயேல் அரபியர்கள்/முஸ்லீம்கள் இருவருமே ஒரே நிலப்பகுதியை, முக்கியமான ஜெருசலேம் பட்டணத்தை ஒவ்வொருவரும் தங்களுக்கே உரியது என்று உரிமை கோருகிறார்கள். அந்த நகரம் பரிசுத்த நகரம் என்று இரண்டு மத விசுவாசங்களிலும் கருதப்படுகிறது. இரண்டு நாடுகளுமே தற்போது அரசியல் ரீதியான பிரச்சனையில் மாட்டிக் கொண்டு அவ்வப்பொழுது கடுமையான அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கும் அதே வேளையில், பாலஸ்தீனா தேசம் ஐ.நா.வின் முழு உறுப்பினர் அந்தஸ்தைப் பெற்ற நாடாக மாறியாக வேண்டும் என்ற நோக்கத்துடன் போதுமான ஐக்கிய நாடுகள் சபை அங்கத்தினர்களிடமிருந்து முறையான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இதனால் அதுவும் முழு U.N. உறுப்பினர் அந்தஸ்தை அடைய முடியும்.

இப்போதைய பாலஸ்தீனா நிலப்பகுதியின் வரலாற்றுப்பக்கத்தைப் புரட்டிப் பார்க்கும் போது, அந்தப் பகுதி கிரேக்க, ரோமானிய மற்றும் ஒட்டமான் சாம்ராஜ்யம் உட்பட பல்வேறு பிரிவினரால் ஆளப்பட்டு வந்திருக்கிறது. முதல் உலக யுத்தத்துக்கு பின்பு, பிரிட்டிஷ் அரசு, அதிகாரபூர்வமான பாலஸ்தீனம் என்று அழைக்கப்பட்ட ஒரு பகுதியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அந்த நிலப்பகுதி, பின்பு தற்போதைய நவீன பாலஸ்தீனம், இஸ்ரயேல், ஜோர்டானின் பகுதிகள் மற்றும் எகிப்து ஆகிய தேசங்களின் பகுதிகளைக் உள்ளடக்கிய பகுதியாக இருந்தது. ஆயினும், யூதர்களும், அரபியர்களும்/முஸ்லீம்களும் அந்த நிலப்பரப்பில், தங்களுக்கென்று பிரத்தியேகமாக ஒரு புதிய தேசத்தை ஸ்தாபிப்பது தங்களுக்குரிய உரிமை என்று அறிவித்தனர்.

ஜெருசலேம் கனெக்ஷன் என்ற பத்திரிக்கையின் அறிக்கை கூறுவதாவது: "பாலஸ்தீனியர்கள் ஒரு உருவாக்கப்பட்ட ஜனங்கள்" என்றும் "பாலஸ்தீன்" (Palestine) என்னும் பதம் பெலிஸ்தினா (Palestina) என்ற வார்த்தையின் ரோமானிய மயமாக்கலாகும் என்பதாகும். கி.பி.135-ல் பார் கோச்பா - Bar Kochba கலகத்தின் தோல்விக்குப் பின்பு, ரோமானியர்களால் பிடிக்கப்பட்ட அந்த நிலப்பரப்பில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களுக்கு ரோமர்கள் இந்த பெயரை வழங்கினர். இது யூதர்களுடைய தோல்விக்குப் பின்பு, அவர்களை சிறுமைப்படுத்துவதற்கு புனிதத்துவத்தைப் பாழாக்கும் ஒரு முயற்சியாக இருந்தது. அது ரோமர்களால் வெற்றி கொள்ளப்பட்ட தேசமாக இருந்ததால், அந்தப் பகுதி ஒரு போதும் தனியுரிமை பெற்ற ஒரு மாகாணமாக அல்லது நாடாக மாற முடியாமல் இருந்தது. 1948-ம் ஆண்டில் பிரிட்டிஷ் அதிகார காலப்பகுதி முடியும் வரை, அந்த அதிகாரத்தின் மூலமாக, நடைமுறையில் இருந்த ஆளுகை அதிகாரத்தின் ஆட்சிக்குட்பட்ட ஒரு நிலப்பரப்பு அல்லது "பிரதேசமாகவே" இருந்து வந்தது. அதற்கு முந்திய காலத்தில் ஒரு "பாலஸ்தீனியன்" என்று வழக்கமாக ஒரு யூதனை குறிப்பிடுவார்கள். தங்களுக்கென்று சொந்த கலாச்சாரத்துடன் தனித்துவமான பாலஸ்தீன மக்கள் என்கிற கட்டுக்கதையானது 1964ம் ஆண்டிலிருந்து யாசர் அராபத் என்பவர் உண்மையைத் திரித்துப் பிரச்சாரம் செய்ததின் விளைவே ஆகும். ஆபிரகாமின் பின் சந்ததிக்களுக்கென்று, சொந்த தேசமாக கொடுப்பேன் என்கிற தேவனுடைய நித்திய உடன்படிக்கையை இவைகள் எதுவும் மாற்றிப்போடவோ அல்லது நீக்கிப்போடவே முடியாது. (ஆதி. 15:18,19; 17:3-8).

யாசர் அராபத், பாலஸ்தீனம் என்று அழைத்து, உரிமை கோருகிற தேசம் "**இஸ்ரயேலின் திரும்ப வருதலுக்கு**" முந்திய நிலப்பகுதியாகும். [அவர்கள் தங்களுடைய சொந்த தேசத்துக்கு திரும்பி வருவதற்கு முந்திய நிகழ்வுகள் இருண்ட யுகங்களிலும், மிக சமீபமான காலங்களில் அவர்கள் எல்லா தேசங்களுக்கும் சிதறடிக்கப்பட்டதும், அவர்கள் துன்பம் அனுபவித்ததுமாகும்]. அவர்கள் சுவிசேஷ யுகம் முழுவதிலுமாக அநேக தேசங்களுக்கும் சிதறடிக்கப்பட்டுப் போகுதல் அநேக வேத வசனங்களில் முன்னுரைக்கப்பட்டுள்ளது. அவைகளில் எரே. 16:13-16-ம் ஒன்று. "**ஆதலால், உங்களை இந்தத் தேசத்திலிருந்தும், நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்கு துரத்தி விடுவேன்: அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களைச் சேவிப்பீர்கள்: அங்கே நான் உங்களுக்குத் தயை செய்வதில்லை... இஸ்ரயேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சத்தியம் பண்ணுவார்கள். நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பி வரப் பண்ணுவேன்.**" அவர்களுடைய தேசமும், பட்டணங்களும் பாழாகிப் போகும் என்பதும் ஆமோஸ் 7:8-ல் முன்னுரைக்கப்பட்டுள்ளது. நிலம் வளர்ந்து கொண்டிருக்கும் செடிகளால் பசுமை நிறைந்த பகுதியாக மாறுவதற்கு முன்பு பயிர் செய்வதற்காக ஒரு நல்ல அரசாங்கத்தால் நிலம் நன்றாக உழுது தயார் செய்யப்படுதல் வேண்டும். தேவனுடைய வார்த்தைகள் வித்தியாசமாக இருக்கிறது. "**மனுஷனில்லாமலும், மிருகமில்லாமலும், அவாந்தர வெளியாய்க் கிடக்கிறதென்று, நீங்கள் சொல்லுகிற இவ்விடத்திலும், யூதாவின் பட்டணங்களிலும், மனுஷனாவது, மிருகமாவது இல்லாத பாழான எருசலேமின் வீதிகளிலும் மகிழ்ச்சியின் சத்தம் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**" (எரே. 33:10).


ஏரோதின் கற்குவாரி கண்டுபிடிக்கப்பட்டது: வேதாகமத்தின் படியான ஆலயத்தின் சுற்றுச்சுவரை இரண்டாவது தடவையாக புதுப்பித்து கட்டுவதற்கு ஏரோது ராஜா பயன்படுத்தின கற்கள் வெட்டி எடுக்கப்பட்டு வழங்கிய கற்குவாரியை கண்டு பிடித்ததாக இஸ்ரேல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்தார். எருசலேமில் பழைய நகரத்தின் சுற்றுச் சுவரை புதுப்பித்துக் கட்டுவதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட கற்பாறைகள் வெட்டி கொடுக்கப்பட்ட இடம், ஜெருசலேம் புறநகர் பகுதியில் பள்ளிக் கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ள இடத்தில் காணப்பட்டது.

கற்குவாரி, ஜெருசலேமுக்கு அருகாமையில் உள்ள ராமாத் ஷீலோமே என்னுமிடத்தில் இருக்கிறது. இன்று ஏரோது புதுப்பித்துக் கட்டின சுற்றுச் சுவர், பரிசுத்த நகரத்திலுள்ள மிகப் பெரிய பிரச்சனை வெடித்து எழும்பத்தக்க மத உணர்வு மிக்க இடத்தில் அமையப் பெற்றுள்ளது அவ்விடம் யூதர்களுக்கு ஆலய மலை (Temple mount) என்றும், இஸ்லாமியர்களுக்கு முக்கியமான புனித ஸ்தலமாகக் கருதப்படுகிறது.

ஒவ்வொன்றும் 20 டன்களுக்கும் அதிக நிறையுள்ள மிகப்பெரிய அளவிலான கற்கள் வெட்டியெடுப்ப-தற்காகவுள்ள கற்குவாரிகள் இப்பொழுது வரை ஆராய்ச்சியாளர்களின் கண்களிலிருந்து தப்பி வந்திருக் கிறது என்று இஸ்ரயேல் தொல்பொருள் ஆணையத்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் யுவல் பாரூக் கூறியுள்-ளார். கற்குவாரியில் கண்டு பிடிக்கப்பட்ட நாணயங்களும், மண்பாண்டங்களும், அந்த கல் BC-19-ல் ஏரோதின் விரிவாக்க காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டது என்பதை உறுதி செய்கிறது. மிகப்பலமான ஆதாரங்களில் ஒன்று, சுண்ணாம்புக் கல்லில் பெரிதாக வெட்டப்பட்ட ஒரு துண்டு, அதாவது, கல்லை பிரிக்க பயன்படுத்தப்படும் இரும்பு கம்பம் (ஆப்பு) கண்டுபிடிக்கப்பட்டது. அந்த கருவி சரியில்லாத முறையில் பயன்படுத்தப்பட்டு, சிக்கிக் கொண்டதாகத் தெரிகிறது. 2000 ஆண்டுகளாக அது அங்கே அப்படியே இருந்திருக்கிறது; ஏனெனில், அந்த பணியாளர் அதை வைத்து, என்ன செய்ய வேண்டும் என்று அறியாதிருந்தார் என்று எகூத் நெஷர் (Ehud Neshar) என்னும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்.

வெட்டியெடுக்கப்பட்ட கல்லின் பெரிய வெளி எல்லைக் கோடு, அந்த இடம் நூற்றுக்கணக்கான அடிமைகள் வேலை செய்த ஒரு மிகப் பெரிய பொதுப்பணித்திட்டம் என்பதைச் சுட்டிக் காட்டியது. தனி நபர் எவரும் இந்த திட்டத்தை மேற்கொண்டிருக்க முடியாது. இது ஏரோது செய்த வேலை யாகத்தான் இருந்திருக்கும் என்று நெஷர் Neshar கூறியுள்ளார்.

இரண்டாவது ஆலயம் ரோமர்களால் BC-70-ல் தரைமட்டமாக்கப்பட்டது. யூதர்களின் பரிசுத்தமான ஜெபிக்கும் இடமாகத் திகழ்ந்த மேற்குச் சுவரானது, ஆலயம் கட்டப்பட்டு நின்றதாக யூதர்கள் நம்பிக்கை கொண்டிருந்த மலையில் மிச்சமாக தொடர்ந்து தப்பிப் பிழைத்துக் கொண்ட நிலையில் 'தக்க வைத்துக் கொண்ட சுவர்' என்று நன்கு அறியப்பட்டது. இப்பொழுது அங்கே தான் அல்-அக்ஸா Al-Aqsa மசூதியும், தங்கத்தால் மூடப்பட்ட Dome of the Rock 'டோம் ஆப் தி ராக்'-ம் நிற்கிறது.



**தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை**

**லூக்கா 1:37**

# இஸ்ரயேல், ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக இருக்கிறது

இஸ்ரயேல் மீண்டும் வந்து, திரும்பவும் ஒரு சுதந்திர தேசமாக மாறியிருக்கிறது. 1948-ம் ஆண்டிலிருந்து சுமார் 35 லட்சம் யூதர்கள் இஸ்ரயேலில் குடியேறியுள்ளனர்! அவர்கள் தங்களுடைய ஆலியா (Aliyah)-வை திரும்பவும் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்துக்குள் உருவாக்கியிருக்-கிறார்கள் [Aliyah - ஆலியா என்பது இஸ்ரயேல் தேசத்துக்கு திரும்பி வருவதற்காக யூத செயல்பாட்டைக் குறிக்கும் வேதாகம வார்த்தையாகும். உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்த யூத மக்களை இஸ்ரயேல் தேசத்துக்குள் குடியேற்றுவதற்காக பழமையான நிகழ்வி லிருந்து, ஒரு உறுதியான நவீன பதமாக தெரிந்தெடுத்துக் கொள்ளப்பட்ட வார்த்தையாகும்]. "**நான் உங்களை ஜனங்களிலிருந்து புறப்படப்பண்ணி, நீங்கள் சிதறுண்டிருக்கிற தேசங்களிலிருந்து உங்களைச் சேர்த்துக் கொள்ளும் போது சுகந்த வாசனையினிமித்தம் நான் உங்கள் பேரில் பிரியமாயிருப்பேன்: அப்பொழுது புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உங்களால் பரிசுத்தம் பண்ணப்படுவேன்**" என்று எசே. 20:41-ல் தேவன் கூறுகிறார். (NKJV)

மனுக்குலத்துக்கு மேசியாவின் ஆசீர்வாதத்துக்கான வாய்க்காலாக, இஸ்ரயேல் உண்மையாகவே உயர்த்தப் படுதலாகிய நீண்ட கால வாக்குத்தத்தம் வெகு தூரத்தில் இல்லையென்று நாங்கள் நம்புகிறோம். இந்த பழைய உலகம் கடந்து செல்லுகிறதும், ஒரு புதிய ஒழுங்குமுறை உருவாகி வருவது போல, மற்றொரு மகா உபத்திரவ காலப் பகுதி நடைபெற இருப்பதாக இருந்தாலும் அந்த காலப்பகுதி, தீர்க்கத்தரிசி அறிவிப்பது போல "யாக்கோபின் அந்த இக்கட்டுக் காலம்" இன்னும் அதன் முழு அளவில் வரவில்லை, அது இஸ்ரயேலர்கள் மத்தியிலும், அரபு நாடுகள் மத்தியிலும் கூட மிகப்பெரிய அளவில் உலகத்தார் மத்தியிலும் மேலும் ஒரு சுத்திகரிப்பு வேலையை கண்டிப்பாக செய்ய வேண்டியதிருக்கிறது. (எரே. 20:1-7; ஏசா. 2:2-5). இந்தக் காரியங்கள், கர்த்தருடைய ஜனங்களாகிய நம்மை, தேவன் மனித சமுதாயத்தில் தொடங்கப் போவதாக அறிவிக்கிற , அடையாளமான புதிய வானத்திலும், புதிய பூமியிலும் நாம் மகிழ்ச்சியடைவதிலிருந்து நம்மைத் தடுக்காது... "**நாம், அவருடைய வாக்குத்தத்தத்தின்படி, நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.**" (2 பேது. 3:13).

# தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவை

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமாக நிறைவேறுகிறவைகளாக இருக்கின்றன. இந்த பொல்லாத தற்போதைய உலகம் தேவனுடைய முழு அளவிலான ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கவில்லை; அதன் பலனாக தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதாகவும் இல்லை. தேவனால் திட்டமிடப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் அவருடைய ஆயிரம் வருட ராஜ்யத்தில்


தான் இந்தப் பூமியில் இங்கே முழுவதுமாக உணரப்படும்; அது இன்னும் எதிர்காலத்தில் நடைபெற வேண்டிய தாயிருக்கிறது. புதிய ஒழுங்கு முறையான காரியங்கள் அந்தக் காலத்தில் தான் செயல்பாட்டில் இருக்கும். பாலஸ்தீன மக்களும் முடிவாக, சந்தோஷகரமான மற்றும் அப்பொழுது அவர்களுக்காக ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கும், முடிவு செய்யப்பட்ட எதிர்காலத்தைப் பெற்றுக் கொள்வார்கள்; ஆனால் அதற்கிடையில், இந்த நன்மைகளைக் கொடுப்பதில் தேவனுடைய ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ள அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இந்த ஆசீர்வாதங்கள், அடுத்த யுகத்தில் பூமியில் முக்கியமான தேசமாக விளங்க இருக்கும் இஸ்ரேல் தேசத்தின் மூலமாகத் தான் வரும் என்பது தெய்வீக ஏற்பாடாக இருக்கிறது. ஒவ்வொருவரும் – ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியைப் பெறும் நாம் உட்பட மனுக்குலத்தார் யாவருமே – அந்த நாளில் இடம் பெற்றிருக்கும் கிறிஸ்துவின் ஆளுகைக்கு கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். இக்காலத்தில் தேவன் தம்முடைய சித்தத்தை அவருடைய தெரிந் தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மூலமாகவே செயல்படுத்துகிறார். இஸ்ரயேல் நல்லொழுக்கத்துக்கு ஒரு சிறந்த முன்னுதாரணம் என்று இது அர்த்தப்படுத்துகிறதில்லை. அந்த ஜனங்களில் அநேகர் உலகத்தாரைப் போலவும், ஆபிரகாமுக்கும் தங்களுடைய முற்பிதாக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள வாக்குதத்தங்களின் மீது அக்கறையற்ற வர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் நீதியான முறையில் நடப்பார்கள் என்று நாம் அவர்களைக் குறித்து எதிர்பார்க்க வேண்டாம். ஆனால் இந்த ஜனங்கள் மீது தேவனுடைய அன்பு அவர்களுடைய நீதியின் நிபந்தனை யின்படியல்லாமல், அவருடைய வாக்குத்தத்தங்களின் படியானதாக இருக்கிறது. இஸ்ரயேலர்கள் அவர்களுடைய பிதாக்களினிமித்தமாகவே, அன்பு கூறப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று அப்போஸ்தலன் பவுல் இதைப்பற்றித் தெளிவுப்படுத்துகிறார். (ரோம. 11:28,29).

இஸ்ரயேல் ஜனங்கள் தங்களைக் குறித்த தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் பற்றி குருட்டுத்தனமாக இருந்தாலும், தேவன் அவருடைய ஜனங்களை நேசிக்கிறார். ஆபிரகாமின் தேவனிடம் விசுவாசம் வைத்திருக்கிற எல்லார் சம்பந்தமாகவும் அப்படித்தான். சுயத்தில் பூரணம் இல்லை. யூதர்கள் இஸ்லாமியர்கள், புறஜாதிகள் ஆகிய எல்லோருமே கிறிஸ்து இயேசுவும் மேசியாவுமாகிய தேவ குமாரன் மீது நம்பிக்கை வைக்கவும், அவரை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். பெரும்பான்மையான யூதர்களுக்கு இது, தற்போது கூட ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இல்லை; ஏனெனில் அவர்கள் நியாயப்பிரமாணத்தையும், தங்களுடைய பாரம்பரியத்தையுமே நம்புகிறார்கள். பெரும்பான்மையான இஸ்லாமியர்களுக்கு இந்த ஏற்பாடு வெற்றி கொள்வதற்கு மிகக் கடினமான மலை போல இருக்கிறது. ஏனெனில் அல்லாவுக்கு சந்ததி (மகன்) இல்லையென்று அவர்கள் எழுத்துக்கள் போதிக்கிறது. கண்களால் காணும் பொருளே உண்மையென்றும் சேற்றுக்குள் சிக்கியுள்ள அல்லது அன்றாடம் சுயத்தை நிரப்பும் வேலையில் ஆழ்ந்துள்ள மிகப்பெரும்பான்மையான உலகத்தாருக்கு, அவர்களுக்கு இரட்சிப்பு தேவை என்பதே அவர்களுடைய அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. ஆபிரகாமுடைய கரம் அவனுடைய குமாரனைக் கொல்லுவதிலிருந்து தடுக்கப்பட்டது போல இஸ்ரயேலின் எதிரிகள், அவர்கள் அரபியர்களாகவோ அல்லது புறஜாதியாராக இருந்தாலும் சரி அவர்கள் யூத ஜனங்களை அழிக்கும் அவர்களுடைய முயற்சியிலிருந்து முறியடிக்கப்படுவார்கள்.

இஸ்ரயேலின் தீர்க்கதரிசியாகிய ஏசாயா ஏசா. 54:17-ல், உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம் என்று எழுதியுள்ளார். தற்கொலை (மனித வெடி) குண்டுகளான மனிதர்களோ, ஏவுகணைகளோ, போர் விமானங்களோ, ராக்கெட்டுகளோ, தேவனுடைய ஜனங்களை, அவர் அவர்களுக்கு கொடுத்-திருக்கிற தேசத்திலிருந்து முறியடிக்கவோ, பிரிக்கவோ முடியாது. ஒரு பாலஸ்தீன தேசம் ஒரு நிறைவு பெற்ற நிஜமானதாக இருப்பதாக காணப்பட்டாலும், அதனை ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் தேவன் இஸ்ரயேலின் தேசத்தை இல்லாமல் ஆக்கி, அப்படி நடக்க அனுமதிக்கவே மாட்டார்.

இஸ்ரயேலின் திரும்ப வருதல் என்பது யேகோவா தேவனுடைய திட்டத்தில் உள்ளது என்று நமக்கு உறுதிப்படுத்துகிற வேதவாக்கியத்துடன் நாங்கள் நிறைவு செய்கிறோம். எரே. 31:4-7: "**இஸ்ரயேல் என்னும் கன்னிகையே மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய்: மறுபடியும் நீ மேள வாத்தியத்தோடும், ஆடல்பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய். மறுபடியும் சமாரியாவின் மலைகளிலே திராட்சைத் தோட்டங்களை நாட்டுவாய்: நாட்டுகிறவர்கள் அவைகளை நாட்டி, அதின் பலனை அனுபவிப்பார்கள். எழுந்திருங்கள், சீயோனிலே நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறுங்காலம் வரும். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய்க் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரினிமித்தம் ஆர்ப்பரியுங்கள்: சத்தத்தைக் கேட்கப்பண்ணி, துதித்து, கர்த்தாவே, இஸ்ரயேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும் என்று சொல்லுங்கள்.**" ***






கிர்த்தருக்குள் அன்பான சத்திய சகோதர சகோதரிகள் யாவருக்கும் மகிழ்ச்சி தரும் விதமாக நீண்ட காலத்திற்கு பிறகு நமது இயக்கத்திற்குரிய பாட்டு புஸ்தகம் தேவனுடைய கிருபையினால் வெளிவந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மிகச் சிறந்த 313 பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

ஒரு புஸ்தகத்தின் விலை: ரூ.260

இந்த பாட்டு புஸ்தகம் தேவைப்படுபவர்கள் கீழ்க் காணும் முகவரியைத் தொடர்பு கொள்ளவும்.



வெளியிடப்பட்ட நாள்: ஆகஸ்ட் 24, 2024

**ஒவ்வொரு நாளும் தேவன்
உன்னை நினைக்கிறார்
சங்கீதம் 139:17**

**ஒவ்வொரு மணி நேரமும் தேவன்
உன்னைக் கவனித்து கொண்டு இருக்கிறார்.
2 தெசலோனிகேயர் 3:3**

**ஒவ்வொரு நிமிஷமும் தேவன்
உன்னிடம் அக்கறை கொள்கிறார்
1 பேதுரு 5:7**

**ஏனென்றால் ஒவ்வொரு நொடியும்
அவர் உன்னை நேசிக்கிறார்
எரேமியா 31:3**

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**